பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 24 வெள்ளிக்கிழமை 10.11.2024 கதிர் 003



பொய்களைக் கூறித் திரியும்

## டக்ளஸுக்கு அமைச்சர் பதவியை ஒருபோதுமே வழங்கமாட்டோம்

தேசிய மக்கள் சக்தியின் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு

ஈ.பி.டி.பி.தலைவர்முன்னாள்நாடாளுமன்ற ☞2

## அமெ. அதிபர் ட்ரம்பை சுட்டவரே அறுகம்குடா சூத்திரதாரியுமாம்

ஈரானுக்கும் இதில் தொடர்பு என்றும் தகவல்

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலிற்கு முன்னர் டொனால்ட் டிரம்ப் மீது தாக்குதலை மேற்கொள்வதற்கான திட்டங்களை தீட்டிய நபரிடம் ஒக்டோபர் மாதம் இலங்கை ☞8

## தனிநபரின் ஆதிக்கத்தினால் தமிழ் அரசுக்குச் சீர்குலைவு

வேட்பாளர் தவராசா குற்றச்சாட்டு

இலங்கைத்தமிழ்அரசுக்கட்சிதனிநபரின் ஆதிக்கத்துக்குள் சென்று சீர்குலைந்து விட்டது என்று சுயேச்சைக் குழு வேட்பாளர் தவராசா தெரிவித்தார். ☞8



## இது ரகசியம் அல்ல!

நண்பர் ஒருவர் நேற்று அழைப்பெடுத்தார். அரசியல் கட்சிகள் பலவற்றுடனும்நெருக்கமானதொடர்பு வைத்திருப்பவர். அவ்வப்போது உள்வீட்டுத் தகவல்களையோ அல்லது கட்சிகளின் நபர்களுக்கு இடையிலான உரையாடல்களின் காணொலிகள், குரல் பதிவுகளை எனக்கும்அனுப்பிவைத்துஅவர்களின் எண்ணவோட்டம்அல்லதுநகர்வுகள் குறித்து எச்சரிக்கை செய்பவர்.

நேற்று எடுத்ததுமே, ''என்ன நீங்கள் சுவாரஸியமான எத்தனையோ விடயங்கள் இருக்க உப்புச்சப்பில்லாமல்எதேதோஎழுதிக் கொண்டிருக்கின்றீர்கள்?'' என்றார். அவருக்குப் பதிலளிப்பதைவிட ''உம்'' கொட்டிக்கேட்டுக்கொண்டிருப்பதுதான் எனக்குப் பயன் தரும் என்பதால், ''ஏன் என்ன விசயம்?'' என்று மட்டும் கேட்டுவிட்டு ''உம்'' கொட்டத் தொடங்கினேன்.

அவர்சொன்னது இதுதான். ☞2

# ஜனாதிபதி அநுரவின் ஆட்சி ஒரே மாத காலத்திற்குள்ளே சறுக்கத் தொடங்கிவிட்டது

## வேட்பாளர் சுமந்திரன் தெரிவிப்பு

ஜனாதிபதிஅநுரதலைமையிலானஆளும் தரப்பு ஒரு மாத காலத்துக்குள்ளேயே சறுக்குவதற்குத் தொடங்கியுள்ளது என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சின் யாழ். தேர்தல் மாவட்ட வேட்பாளர் சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் நாடாளுமன்றத் தேர்தலில் உங்கள்கட்சிக்குஏன்வாக்களிக்கவேண்டும்? தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு என்ன? எனும் தொனிப் பொருளிலான மக்கள் மன்றம் நிகழ்வு நேற்று யாழ்.கலைத்தூது ☞2

## தேர்தல் விடுமுறை குறித்து அறிவிப்பு

2024 நவம்பர் 14 நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் வாக்களிக்கவுள்ள பல்கலைக்கழக மற்றும் க.பொ.த. உயர்தர மாணவ,மாணவிகளின்தேர்தல்விடுமுறை தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பொதுத் தேர்தல் அன்று அரச ☞9

## மண்சரிவு எச்சரிக்கை நீடிப்பு

பல மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை மேலும் 24 மணித்தியாலங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் அறிவிப்பொன்றை விடுத்துள்ளது.

இதன்படி, பதுளை மாவட்டத்தின் பதுளை, பசறை, ஹாலிஎல, கண்டி மாவட்டத்தின் பததும்பர, தும்பனை, உடுதும்பர, யட்டிநுவர, ☞8






## பாடசாலை உபகரணங்கள் வாங்க வறிய மாணவர்களுக்குப் பணம்

ஜனவரி இறுதியில் வழங்கப்படும்

பாடசாலைஉபகரணங்களை வாங்க முடியாத வறுமையின் பிடியிலுள்ள பிள்ளைகளுக்கு அடுத்த வருடம் ஜனவரி மாத இறுதியில்அவற்றைகொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவு வழங்கப்படும் என ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க வெள்ளிக்கிழமை, கேகாலையில் தெரிவித்தார்.

முன்னர் ஆட்சியில் இருந்தவர்கள் 'ஜனசவிய', 'சமுர்த்தி', 'திவிநெகும' போன்ற பெயர்களை மாற்றினாலும், குறைந்த வருமானம் ☞8

## முன்னணியின் தேர்தல் அறிக்கையை கடுமையாக விமர்சித்து தள்ளிய சுரேஸ்

இந்தியாவுக்கும்சீனாவுக்கும் இடையிலான மோதல் போராக உருவெடுக்கும்பொழுது ஈழத் தமிழர்கள் எதிர்பார்க்கும் தீர்வு கிடைக்கும் என்று பொருள்பட தமிழ்த் தேசிய முன்னணி தமது தேர்தல்அறிக்கையில்கூறியுள்ளது. உலகின் ஒடுக்கப்பட்ட இனங்கள் விடுதலைபெறும்பொழுது உண்மையான உலக அமைதி நிலவும் என்பதை உறுதியாக நம்புபவர்கள் எமது தமிழ் மக்கள். எனவே எமது மக்கள் இரண்டு நாடுகளுக்கு இடையில் ஏற்படும் மோதல் எமக்குத் தீர்வை ☞8

## மக்களின் ஒற்றுமை உணர்வுக்கான ஒரே தெரிவு ஜனநாயகக் கூட்டணியே

சிறீகாந்தா தெரிவிப்பு

தமிழ்மக்கள்ஒற்றுமையையே விரும்புகின்றார்கள்என்றஆழ்ந்த உணர்வைநாம்ஏற்றுக்கொண்டு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியாக செயற்பட்டு வருகையில் அவர்களின் ஏகோபித்த ஆதரவு எமக்கே வழங்கப்பட வேண்டும் என்று என்.சிறிகாந்தா வலிறுத்தினார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த 'மக்கள் மன்றம்' நிகழ்வில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களின் ☞8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கட்சித் தாவல் புகழ் தென்மராட்சி அம்மணிக்கும் அவர் கட்சி தாவுவதற்கு அவசரமாக உதவி புரிந்த கட்சியின் மற்றொரு வேட்பாளருக்கும் இடையில் பணப் பரிவர்த்தனை தொடர்பில் பிக்கல் பிடுங்குப்பாடுகள் ஏற்பட்டுள்ளதாம். அம்மணியின் பெயரைப் பயன்படுத்தி அவரது தேர்தல் செலவுக்காக கட்சிகளை விலைக்குவாங்குவதில்புகழ்பெற்றபுலம்பெயர் தமிழ் பெரு முதலாளி ஒருவரிடம் இருந்து 3 கோடி ரூபாய் பணம் பெறப்பட்டதாம். அம்மணியின் சம்மதத்துடன்தான் அந்தப் பணம்பெறப்பட்டதாம்.அம்மணியைதேர்தலில் களமிறக்க அழைத்து வந்து கையொப்பம் இடப்பண்ணியவரே இந்தப் பணத்திற்கும் முகவராகச் செயற்பட்டிருக்கின்றார். ஆனால், அந்தப் பணத்தில் வெறும் 50 லட்சம் ரூபாய் மட்டும்தான் அம்மணிக்கு வழங்கப்பட்டுள்ளதாம். மீதிக் காசு வழங்கப்படவில்லை.

அது குறித்து அம்மணி அந்த முகவரின் கட்சித் தலைவரிடம் அழைப்பெடுத்து முறையிட்டுள்ளார். கட்சித் தலைவருக்கும் அந்தபுலம்பெயர்பெருமுதலாளிதான்தேர்தல் செலவுகளுக்கு நிதி ஆதாரம். அதனால் பதறிப்போன தலைவர் அழைப்பெடுத்து முகவரைக் கேட்டிருக்கிறார். அதற்கு அவரோ, அம்மணி தன்னைத் தவிர்த்துவிட்டு தமது கூட்டணிக்குள்ளேயே இருக்கும் மற்றொரு கட்சியோடு சேர்ந்து தனித்து ஓட முயற்சிக்கின்றார் அதனால்தான் பணத்தைக் கொடுக்கவில்லை என்று விளக்கம் சொல்லியிருக்கிறாராம். இதனால் அம்மணியின் தரப்பில் கடுப்பாகிப் போய் நிற்கின்றனராம். முகவர் இந்தத் தேர்தலில் எப்படியும் வெற்றிபெற்றுவிடாமல் இருப்பதற்காக களத்தில் குத்தி முறிந்து வேலை செய்கிறார்களாம்.

இதற்கிடையில், தென்மராட்சி புகழ் முன்னாள் அதிபர் அந்தப் பகுதியில் தேர்தல் பணியாற்றும் இளைஞர்கள் பலரையும் அழைத்துப்பேசியுள்ளார். அதில் தென்மராட்சி அம்மணியும் அவரைத் தேர்தலில் களமிறக்க அழைத்து வந்த முகவரும் இந்தத் தேர்தலில் எப்படியும் வெற்றிபெறவிடக்கூடாது என்று அன்புக்கட்டளை போட்டுள்ளாராம். மரியாதைக்குரியவரான அவரின் கருத்தால் மனக்குழப்பம் அடைந்துள்ளனராம் அம்மணிக்குப் பணியாற்றும் பலரும். அதுமட்டுமல்லாமல், தேர்தலில் தோற்ற பின்னர் அம்மணிக்கு தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராகும் வாய்ப்பு வழங்கப்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும், அதற்காகத் தீவிரமாக உழைக்கவேண்டும் என்பதும் இளைஞர்களுக்கான அன்புக் கட்டளைகளில் ஒன்றாம்.

இதற்கிடையில் அந்த புலம்பெயர் தமிழ் பெரு முதலாளி பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டும் விளையாட்டாக தமிழ் அரசியல் தலைவர்களிலும் தனக்கு வாய்த்த அடிமைகளுக்காகப் பணத்தைச் செலவிடுவதுமட்டுமல்லாமல்தெற்கில்சிங்களக் கட்சிகளை வாங்கி சிங்களவர்களையும் தேர்தலில் நிற்கவைத்தது போக, முஸ்லிம் தலைவர்களையும் விலைக்கு வாங்கும் 'டீல்'களிலும் மும்முரமாக இருக்கிறாராம். அதற்கு ஆதரமாக முஸ்லிம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருடன் அவர் அன்னியோன்னியமாகப் பேசிக்கொண்டிருக்கும் ஒளிப்படத்தையும் அனுப்பி வைத்திருந்தார்.

எல்லாம் அவன் செயல் என்பதைப் போல, ''எல்லாம் அந்த விண்வெளிக்கு முதல் முதலில் போன நாய்க்கே வெளிச்சம்'' என்றுவிட்டுக் கேட்டுக்கொண்டிருந்தேன்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## 'பார்' லைசென்ஸ் குற்றச்சாட்டை சுமத்தியபடி

# எனது படத்தை போட்டு தேர்தலில் வாக்கு கேட்பது போக்கிலித்தனம்

## சொந்தக் கட்சி வேட்பாளர்களுக்கு எதிராகவே சிறீதரன் போர்க்கொடி

மதுபானசாலைக்கு அனுமதி வழங்கினோம் என்று கூறிக்கொண்டு எங்கள் படத்தைப் போட்டு வாக்கு கேட்கும் போக்கிலித்தனத்துக்கு ஏன் போகின்றீர்கள்? என்னுடைய அனுமதி இல்லாமல் மேற்கொள்ளும் இந்தச் செயற்பாடு கீழ்த்தரமான செயற்பாடாகும். வரலாறும் காலமும் இதற்குச் சரியான பதிலை வழங்கும் என்று தனது சக வேட்பாளர்களையே கடுமையாகக் குற்றஞ்சாட்டிப் பேசியிருக்கிறார் தமிழ் அரசுக் கட்சி யாழ். மாவட்ட வேட்பாளர் சிறீதரன்.

யாழ். வடமராட்சியில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தெரிவித்ததாவது:

2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 நடைபெற இருக்கின்ற 10ஆவது நாடாளுமன்றத்துக்கான தேர்தல் என்பது தமிழ் மக்கள் தங்களுக்கான அரசியல் வாழ்வை, தங்களுக்கான அரசியல் உரிமையை, தங்களுக்கான அரசியல் இருப்பைத் தீர்மானித்துக் கொள்வதற்கான ஒரு தேர்தல் களமாக அமைகின்றது.

தமிழ் மக்கள் கூருணர்வோடும் தெளிவான பார்வையோடும் இந்த அரசியல் பெருவெளியில் நாங்கள் எப்படி இருக்க வேண்டும், நாங்கள் எவ்வாறு வாக்களிக்க வேண்டும், யார் யாரைத் தெரிவு செய்யவேண்டும், யார் யார் நாடாளுமன்றம் சென்றால் எங்களுக்காக பேசுவார்கள், எங்களினுடைய மக்களின் உரிமைகளை கொண்டு செல்வார்கள் என்ற அடிப்படையில் உங்களுடைய தெரிவுகள் இருக்கும் என்று நான் நம்புகின்றேன்.

ஒட்டுமொத்தத்தில் இந்தத் தேர்தலுக்கான நீதிபதிகளாக தமிழர்களே அமைவதால் அவர்களுடைய வாக்குகள் சிதறிப் போகாமல் அது தமிழ்த் தேசியத்துக்கான தமிழ்த் தேசியத்தைப் பேசுகின்றவர்களுக்கான வாக்காக மாற வேண்டும்.

இப்போது யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் மட்டும் 44 தரப்புகளாக 396 பேர் 6 ஆசனங்களுக்காக களத்திலே இருக்கின்றார்கள். ஆகவே, தேர்தலில் வாக்குகள் சிதறடிக்கப்பட இருக்கின்றன. எங்கள் மக்களின் எண்ணங்கள் சிதறடிக்கப்பட்ட இருக்கின்றன. மக்களுடைய உணர்வுகள் மழுங்கடிக்கப்படும் நிலைகள் காணப்படுகின்றன. இவ்வாறான நிலையில் ஒட்டுமொத்த தமிழ் மக்களிடமும் கேட்பது வடக்கு, கிழக்கில், மலையகத்தில், கொழும்பில் வாழுகின்ற தமிழர்கள் தமிழ்த் தேசியத்துக்காகத் தமிழர்களுடைய உரிமைக்காக யார் யார் உரத்துக் குரல் கொடுக்கின்றார்களோ, யார் யார் தேவையென்று கருதுகின்றீர்களோ, அந்தவகையில் தமிழ்த் தேசியத்துக்காக உங்களுடைய வாக்குகள் அமைய வேண்டும் என்பதுதான்.

நான் மதுபானசாலைக்குப் சிபாரிசு செய்ததாகப் போலி ஆவணங்களைத்தயாரித்துஎனக்குஎதிராகதிட்டமிட்டுமேற்கொள்ளப்பட்டு வரும் பரப்புரை ஒரு கூட்டுச் சதியாகும். எங்களது கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும், சாவகச்சேரியைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவரும், கிழக்கிலே இருக்கின்ற ஒரு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இணைந்து எனக்கு எதிராகத் திட்டமிட்ட கூட்டுச்சதியாகவே இந்த விடயத்தைக் கையாளுகின்றார்கள்.

இந்தக் கூட்டுச் சதி மக்களுக்கு மிகத் தெளிவாகவே தெரியும். மக்கள் அதைப் புரிந்துகொள்கின்றார்கள். யாராவது கூடுதலாக விருப்பு வாக்குகளை எடுத்து விடுவார்கள் அல்லது கட்சியை மீண்டும் கட்டியமைப்பதற்கு அவருக்கு ஓர் ஆணையை மக்கள் வழங்கிவிடுவார்கள் என்ற பயத்தில் கட்சிக்குள் இருக்கின்ற சில அநாமதேயமான சந்தேகப் பிறவிகளே அல்லது தங்கள் மீது நம்பிக்கை இல்லாதவர்களே இந்த விடயத்தைக் கையாளுகின்றார்கள்.

எங்கள் மீது மதுபானசாலை அனுமதி வழங்கியதாகக் குற்றஞ்சாட்டும் இவர்கள் தங்களுடைய படத்துடன் என்னுடைய படத்தை இணைத்து கிளிநொச்சிக்குத் தபாலில் அனுப்புகின்றார்கள். நீங்கள் அவருக்கும் (எனக்கும்) போடுங்கோ, எங்கள் இருவருக்கும் போடுங்கோ என்று. இது ஒரு கேவலமான செயல் இல்லையா?

மதுபானசாலை இருக்கு என்று கூறிக்கொண்டு எங்கள் படத்தைப் போட்டு வாக்கு கேட்கும் போக்கிலித்தனத்துக்கு ஏன் போகின்றீர்கள்? என்னுடைய அனுமதி இல்லாமல் மேற்கொள்ளும் இந்தச் செயற்பாடு கீழ்த்தரமான செயற்பாடாகும்.

வரலாறும் காலமும் இதற்குச் சரியான பதிலை வழங்கும். தமிழ் அரசுக் கட்சியின் தலைவராக நான் தெரிவு செய்யப்பட்டபோது வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பு மற்றும் புலம்பெயர் தேசங்களிலும் ஒரு எழுச்சி ஏற்பட்டிருந்தது. தமிழ் அரசுக் கட்சியின் புதிய நிர்வாகத்துக்கு எதிராக வழக்குப் போட்டு தடுக்காது இருந்திருந்தால் எமது கட்சிக்கு யாழ்ப்பாணத்தில் 4,5 ஆசனங்களை அலுங்கல் - குலுங்கல் இல்லாமல் நாங்கள் எடுத்திருக்க முடியும்.

தங்களுடைய சுயநலத்துக்காகவே எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள், தங்களுடைய பதவி மோகங்களுக்காகத் தமிழ்த் தேசியத்தை அழித்து தமிழ் மக்களை வேறு திசைக்குக் கொண்டு செல்வதற்காக அவர்கள் செய்த கைங்கர்யம்தான் வழக்கு. அதன் காரணமாகத் தமிழ் அரசுக் கட்சியின் புதிய நிர்வாகத்துக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது.

இடைக்காலத் தடை எப்போது விலக்கப்படுகின்றதோ அப்போது நான் தலைவராகப் பொறுப்பெடுப்பேன். அன்புக்குரிய மக்களிடம் நான் கேட்டுக்கொள்வது இம்முறை எனக்கு ஒரு ஆணை தாருங்கள். சிறீதரன் ஆகிய நான் திரும்பவும் தமிழரசுக் கட்சியின் தலைவராகப் பொறுப்பெடுத்து இந்தக் கட்சியை வழிநடத்தி, புலம்பெயர் நாடுகளில் இருக்கக்கூடிய தமிழர்களையும், நிலத்தில் இருக்கின்ற தமிழர்களையும் ஒருங்கிணைத்து வடக்கு - கிழக்கு, மலையகம், கொழும்பு என்று எங்கள் தமிழர்களை ஓரணியாக ஒன்றாக்கி, தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்கும் எல்லாக் கட்சிகளையும் ஒரு பாதையில் கொண்டுவந்து, தேசிய விடுதலைக்கான இயக்கத்தை அமைப்பதற்கு என்னாலான முழு முயற்சிகளையும் மற்றவர்களையும் அரவணைத்து நான் செய்வதற்கு எனக்கொரு ஆணை தாருங்கள். மீண்டும் நான் தமிழ் அரசுக் கட்சியின் தலைவராகப் பணியாற்றுவதற்கான ஆணையாக அது இருக்கட்டும் என எனது மக்களிடம் வினவி நிற்கின்றேன்.

தேர்தல் முடிந்த பிற்பாடு நான் கட்சியின் அடுத்த தலைமைத்துவத்தைப் பொறுப்பெடுப்பேன். வழக்குகள் ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்படும் என நினைக்கின்றேன். 2025ஆம் ஆண்டு பெப்ரவரி 13 ஆம் திகதி வழக்கின் தவணை. மேலும் தவணைகள் போகும் வாய்ப்பும் உள்ளது.

இப்போதும் வழக்கைப் போட்டவர்கள் கைவாங்க முடியும். அவ்வாறு செய்தால் கட்சி மீண்டும் நல்ல நிலைக்கு வரும். மக்களிடம் கட்சி மீது நம்பிக்கை வரும். கட்சிக்குள் இருப்பவர்களே கட்சிக்கு எதிராக வழக்குப் போட்டிருக்கும்போது தமிழ் மக்களுடைய விடங்களை எப்படிப் பார்ப்பார்கள் என்ற கேள்வி மக்களிடம் எழுந்துள்ளது.

தற்போது மக்கள் யாவற்றுக்கும் தீர்ப்பு எழுதுகின்ற காலம். யார், யார் என்னென்ன கேவலங்களைச் செய்கின்றார்களோ, யார் யார் மக்களுக்கு எதிரான விரோதமான நடவடிக்கைகளை ஆற்றுகின்றார்களோ அவர்களுக்குத் தீர்ப்பு அளித்து அவர்களுக்கு உரிய தண்டனையை வழங்குகின்ற காலம் மக்களிடம் வந்திருக்கின்றது. மக்கள் எங்களிடம் கேள்வி கேட்கின்ற காலம் போய் மக்கள் நீதிபதிகளாக மாறி இருக்கின்றார்கள்.

உங்களுடைய நீதிக்காக எதிர்வரும் நவம்பர் 14 மற்றும் 15 நாள்களுக்காகக் காத்திருக்கின்றோம் - - என்றார்.

## ஜனாதிபதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மண்டபத்தில் நடைபெற்றது. அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி பழம்பெரும் கட்சியாகும். தற்போது மாற்றம் தேவை என்று கூறுபவர்கள் பழம்பெரும் கட்சியை விட்டுவிட்டு புதிய கட்சிக்கு வாக்களித்து விடுவார்கள் என்று எதிர்பார்க்கின்றார்கள். அது உண்மையான மாற்றம் அல்ல. அடையாளம் மாற்றாத அரசியல் மாற்றமே உண்மையான மாற்றமாகும். நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு தேசம் என்கிற அடையாளத்தினை வழங்கியது எமது கட்சியாகும். அந்தக் காரணத்தினால்தான் எமது கட்சியின் ஸ்தாபகரை தந்தை செல்வா என்று அழைக்கின்றார்கள்.

தமிழ் மக்களின் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்படுவதற்கு சமஷ்டி அடிப்படையில் அதிகாரங்கள் பகிரப்படவேண்டும் என்பதை ஆரம்பத்திலிருந்தே வலியுறுத்தி வருகின்றோம். அவ்வாறான நிலையில் ஏனைய கட்சிகள் தற்போதுதான் சமஷ்டி பற்றிப் பேசுகின்றன. அவ்வாறான நிலையில் நீண்டகாலமாக சமஷ்டியை வலியுறுத்தும் எமக்கு வாக்களிப்பதில் என்ன தவறுள்ளது.

அதேநேரம், தமிழ் அரசுக் கட்சி பொருத்தமான மாற்றங்களை செய்துகொண்டுதான் வருகின்றது. உதாணரமாக யாழ்.தேர்தல் மாவட்டத்தினை எடுத்துக்கொண்டால் ஒன்பது வேட்பாளர்களில் இருவரைத் தவிர ஏனைய எழுவரும் நாடாளுமன்ற தேர்தல் களத்துக்குப் புதியவர்கள்.

அதேபோன்று அவர்களில் இரண்டு பெண் வேட்பாளர்களுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. வழக்கமாக, பெண் வேட்பாளர்கள் ஆணை மையப்படுத்திய வகையில்தான் தெரிவு செய்வார்கள். ஆனால் இம்முறை உண்மையான செயற்பாட்டாளர்களை நாம் அடையாளம் கண்டு நிறுத்தியிருக்கின்றோம்.

அதேவேளை, நாட்டில் மாற்றத்தினை ஏற்படுத்துவதாகக் கூறிக்கொண்டு ஆட்சிப்பீடம் ஏறியுள்ள ஜனாதிபதி பதவியேற்று ஒருமாதத்துக்குள்ளேயே தனது செயற்பாடுகளில் இருந்து சறுக்க ஆரம்பித்துவிட்டார். மதுபான சாலைகளுக்கான சிபார்சுக் கடிதங்களை வழங்கிய அரசியல்வாதிகள், அனுமதிப்பத்திரங்களைப் பெற்றவர்களின் பட்டியலை அவர் தற்போது வரையில் வெளிப்படுத்தவில்லை.

ஜனாதிபதி அநுர, புதிய அரசமைப்புக்கான செயற்பாடுகளை ஏற்கனவே எமது பங்கேற்புடன் உருவாக்கப்பட்ட இடைக்கால அறிக்கையினை அடிப்படையாக வைத்துத் தொடங்கவுள்ளார் என்று எழுத்து மூலமாகவே தனது அறிக்கையில் உள்ளடக்கியுள்ளார்.

இடைக்கால அறிக்கையை நாம் தயாரித்து அதனை வெளியிடுவதற்கு தயாரானபோது, அப்போது அநுரகுமார எம்மிடத்தில் வருகை தந்து கூறினார், இந்திய, இலங்கை ஒப்பந்தத்துக்கு எதிராகவும், மாகாண சபை முறைமைக்கு எதிராகவும் ஆயுதம் ஏந்தியவர்கள் நாங்கள். ஆகவே இடைக்கால அறிக்கையின் உள்ளடக்கம் சம்பந்தமாக நாம் கட்சிக்குள் ஆராயவேண்டும் என்று எனக்கும், சம்பந்தனுக்கும் கூறினார்.

அதனையடுத்து, அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவிடத்தில் அவரை நாங்கள் அழைத்துச் சென்று அவரது கூற்றில் நியாயம் உள்ளது. கால அவகாசத்தினை வழங்குவோம் என்று கூறினோம். ஒருமாத கால அவகாசம் வழங்கப்பட்ட நிலையில் இடைக்கால அறிக்கையை ஏற்றுக்கொள்வதாக அநுர குறிப்பிட்டார்.

அதே அநுர தலைமையிலான இன்றைய ஆளும்தரப்பு சறுக்க ஆரம்பித்துள்ளது. அதனைக் கையாளவேண்டியுள்ளது. இடைக்கால அறிக்கையை முன்னோக்கி நகர்த்த வேண்டியுள்ளது. வடக்கு, கிழக்கு அபிவிருத்தி நிதியத்தை உருவாக்கும் செயற்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. இதற்காக பலமான அணியொன்றை வடக்கு, கிழக்கில் இருந்து தமிழ் மக்கள் அனுப்பவேண்டும். அந்த அணியானது, தமிழ் அரசுக் கட்சியாகவே இருக்க வேண்டும் - என்றார்.

## டக்ளஸுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் சக்தி ஆட்சியில் அமைச்சுப் பதவி வழங்கும் எண்ணம் இல்லை என தேசிய மக்கள் படையின் நிறைவேற்று உறுப்பினர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தபிமல் ரத்நாயக்க யாழ்ப்பாணத்தில் வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

தேர்தல் கூட்டம் ஒன்றில் பேசிய அவர்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# அம்பாந்தோட்டையில் தமிழ்க் கட்சிகள் வேட்பாளர் ஒருவரை நிறுத்தமுடியுமா?

## எமது இனத்துக்கு மட்டும் ஏன் இந்த அவலம் என தி.பிரகாஷ் வேதனை



அம்பாந்தோட்டை போன்ற முழு சிங்கள மாவட்டத்தில் தமிழ் கட்சி ஒன்று சென்று வேட்பாளரை நிறுத்த முடியுமா? அவ்வாறு நிறுத்தினாலும் ஒரு வாக்காவது உண்மையான சிங்களக் குடிமகன் ஒருவரிடம் இருந்து பெறமுடியுமா? என்று மிகவும் காட்டத்துடனும் வேதனையுடனும் கேள்வி எழுப்பினார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளரும் வலி.தெற்கு பிரதேசசபையின் முன்னாள் தவிசாளருமான தி.பிரகாஷ்.

வலி.வடக்கு பிரதேசம் முழுமையையும் உள்ளடக்கி, வலி.வடக்கு பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் சோ.சுகிர்தன் தலைமையில் பன்னாலை வறுத்தலம் பிள்ளையார் ஆலயத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

தொடர்ந்து தெரிவித்த அவர் மேலும் கூறியவை வருமாறு -

எமது மண்ணில் ஆசனங்கள் ஒவ்வொரு தேர்தலுக்கும் குறைந்து கொண்டே செல்கின்றது. ஆனால், அதில் பங்குபோடுகின்ற சிங்களக் கட்சிகள் நாளுக்குநாள் அதிகரித்துச் செல்கின்றன. ஆரம்பத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்த காலத்தில் ஐக்கியதேசியக் கட்சி எமது யாழ்.கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் போட்டிபோட்டு, மகேஸ்வரன் வெற்றியும் பெற்றார். உடனே சுதாகரித்த விடுதலைப்புலிகள், சிங்களக் கட்சிகள் இங்கு தமிழ் அடிமைகளை வைத்து வாக்குப்பெற முனைகிறார்கள் என்று உணர்ந்து, 2004 ஆம் ஆண்;டு பொதுத் தேர்தலில் மகேஸ்வரனைப் பிடித்து கொழும்பில் தேர்தலில் போட்டியிடுமாறு அனுப்பினார்கள். கொழும்புமாவட்டத்தில் தமிழர்கள் செறிந்துவாழும் பிரதேசத்தில் மகேஸ்வரன் தேர்தலில் தமிழ்வேட்பாளராக சிங்களக் கட்சியில் நிறுத்தியமையால் கொழும்புவாழ் தமிழர்கள் அனைவரும் அவருக்கு அமோக வாக்குகளை வழங்கி ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட வாக்குகள் பெற்று நாடாளுமன்றம் சென்றார்.

பின் அங்கஜன் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் வந்தார். அதன்பின் ஐ.தே.க., ஐக்கிய மக்கள் சக்தி என்று வந்து, இப்போ தேசிய மக்கள் சக்தி என்ற புதுப்பெயருடன் தென்னிலங்கை வன்முறைக்குழு ஒன்றும் இங்கு படித்தவர்கள், வைத்தியர்கள் என்று எமது வாக்குகளைப் பெருமளவில் பெற திடசங்கற்பம் பூண்டுள்ளது. 2009 இல் எமது இனவிடுதலைப் போராட்டம் மௌனிக்கப்பட்டமையால் வந்த வினை இது. அவர்கள் இருந்திருந்தால் இவர்கள் வாலைச் சுருட்டிக்கொண்டு வீட்டுக்குப் பின்னாலே நின்றிருப்பார்கள்.

இந்த அவல நிலை எமது இனத்திற்கு மட்டும் எதற்காக? கிடைக்கின்ற மிகச்சொற்ப ஆசனங்களிலும் சிங்களக் கட்சிகள் பங்குபோடுகின்றனவே. தமிழ் கட்சிகளிலும் வடக்கு கிழக்கில் ஒருசில கட்சிகள் ஆட்சியாளர்களுடன் சேர்ந்தியங்குவதால் எமது உரிமைகள் தொடர்பில் குரல் கொடுப்பதற்கு எமக்கான அங்கீகாரம் போதாது?

ஆகவே, படித்த வடக்குக் கிழக்கு தமிழ்மக்களே! நீங்கள் தென்னிலங்கைக் கட்சிக்கு என்றைக்கும் வாக்களிக்கக்கூடாது. அவர்கள் சலுகைகளைப் பற்றி மட்டும்தான் பேசுவார்கள். எமது உரிமைகள் தொடர்பில் வாய்திறக்கவே மாட்டார்கள். சலுகைகளும் தேவைதான். அவை உரிமைகளைப் பெற்ற பின்னர் நாமும் சேர்ந்து கோருவோம். எனவே, மக்கள் நீங்கள் சிந்தித்து வடக்கு கிழக்கு வாக்குகளை வீணடிக்காமல் ஒற்றுமையாக - ஓரணியாக - திரண்டு உரிமைக் கட்சியாகிய - தந்தை செல்வாவால் சமஷ்டிக் கட்டமைப்புக்காக உருவாக்கப்பட்டுள்ள தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்து தமிழ் உணர்வாளனாக எமது வரலாற்றுக் கடமையை நிறைவு செய்வேம். - என்றார். (05)

# இளைஞர்களுக்கான புதிய களம் உருவாகவேண்டும்

## ரணில் வில்லத்தரகே கோரிக்கை

நாட்டிலுள்ள இளைஞர்களின் திறன்களை கண்டறிந்து அவற்றை தொழில்துறை மட்டத்திற்கு கொண்டுவந்து புதிய தொழில் மற்றும் வியாபார வாய்ப்புகளுக்கான களத்தை உருவாக்க முயற்சிப்பதாக புதிய ஜனநாயக முன்னணியின் (சிலிண்டர்) கொழும்பு மாவட்ட வேட்பாளர் ரணில் வில்லத்தரகே தெரிவித்தார்.

கெஸ்பேவ பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ரணில் வில்லத்தரகே -

இன்று இளைஞர்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று வேலை வாய்ப்புகளை தேடுவதாகும்.

குறிப்பாக, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் வேலை வாய்ப்புகள் காணப்படுகின்ற போதிலும், எம்மவர்கள் தொழில்முறை திறமைகளை கொண்டிருக்காமையானது ஒருபாரிய பிரச்சினையாக காணப்படுகின்றது.

அதற்குத்தீர்வாக, அவர்களுக்குள் மறைந்திருக்கும் திறமைகளை அடையாளம் கண்டு, தொழில் சந்தைக்கு பொருத்தமான வகையில் அவர்களது தொழில்சார் திறன்கள் மற்றும் அறிவை மேம்படுத்த வேண்டும்.

இளைஞர் சமூகம் ஆக்கபூர்வமான யோசனைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக வேலை வாய்ப் பைப் பெறவும், தொழில் முனைவோராக தங்கள் எதிர்காலத்தை வெல்வதற்கும் அவர்கள் ஆக்கபூர்வமான யோசனைகள் மற்றும் அவர்களின் தொழில்முறைத் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இதன் மூலம் இளைஞர்களிடையே காணப்படும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்குத் தீர்வு காணலாம். கல்வி, தொழில் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு போன்ற பிரச்சினைகளை கண்டறிந்து தேசிய கொள்கையை உருவாக்குவது காலத்தின் தேவையாகும்.

இலங்கைக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை முறையான முகாமைத்துவத்தின் ஊடாக ஸ்திரமான நிலைக்கு கொண்டு வருவதற்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க செயற்பட்டார்.

பொருளாதாரம் பற்றிய எதிர்கால முடிவுகள் நிலையான பொருளாதார நிலையை முன்னோக்கிக் கொண்டு செல்லுமா அல்லது பின்னோக்கிக் கொண்டு செல்லுமா என்பதை தீர்மானிக்கின்றன.

ஒரு தொழில்முயற்சியாளர் எனும் வகையில், நமது நாட்டை கட்டியெழுப்பக்கூடிய பொருளாதாரத் திட்டத்துடன் இந்த தேர்தலில் போட்டியிடுகிறேன்.

இங்கு, மூலப்பொருள்கள் மற்றும் விநியோகத்தை அடிப்படையாகக் கொண்ட வணிகங்களை விட இலங்கைக்கே உரித்தான வர்த்தக நாமத்தின் கீழ் வெளிநாட்டுச் சந்தையை அணுகுவது மிகவும் முக்கியமானதாகும்.

அதன் மூலம் அந்நியச் செலாவணியை ஈட்டி, இந்நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் வேலைத்திட்டத்தை உருவாக்க முடியும். அத்தகைய கொள்கையே நாட்டுக்கு தற்போது அவசியமாகும்.

ஏழைகள் அற்ற, பணக்காரர்களை உருவாக்குவதற்காக நாட்டில் பொருளாதாரம், அரசியல், கலாசாரம், கல்வி போன்ற துறைகளில் தரமான மாற்றத்தை அரசியல்வாதி ஏற்படுத்த வேண்டும்.

நாம் தொழில்முயற்சியாளர்களாகவோ அல்லது அரசியல்வாதிகளாகவோ உயர்ந்த வாழ்க்கைத் தரத்தில் வாழ்கின்ற போதிலும், எம்மைச் சுற்றியுள்ள சமூகத்தில் எமது சொந்த மக்கள் வறுமையில் ஒடுக்கப்படுகிறார்கள் என்றால் அது ஒரு பிரச்சினையாகும்.

அந்த நிலைமையை மாற்றும் வகையில் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என நம்புவதாக ரணில் வில்லத்தரகே இங்கு சுட்டிக் காட்டினார்.

(05)

# சட்டவிரோத மரக்களஞ்சியசாலை மன்னார் பொலிஸாரிடம் சிக்கியது



மன்னார் சிலாவத்துறை பொலிஸ் பிரிவில் சட்டவிரோதமான முறையில் மரக்குற்றி களஞ்சியம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது சந்தேகநபர் 1820 மரத் துண்டுகளுடன் சகைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாகத் தெரிய வருவதாவது -


மன்னார் சிலாவத்துறை பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட பகுதியிலுள்ள கயுவத்தை பகுதியில் அனுமதி பத்திரமின்றி கயுவத்தை பகுதியில் மரச்சாலை இயங்கி வருவதாக பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலைத் தொடர்ந்து பொலிஸார் இவ்இடத்தைகைப்பற்றியுள்ளனர்.

மன்னார் பிரிவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.ஏ.எஸ்.சந்திரபாலவின் பணிப்புரையின் கீழ் மன்னார் மாவட்ட குற்றப்புலனாய்வு பிரிவின் அதிகாரிகளால் மாவட்ட குற்றதடுப்பு பிரிவு பொறுப்பதிகாரியான பொ.பா.சில்வாவின் வழிகாட்டுதலின் கீழ், பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ரத்னமனல, குணசிங்க? கருணாசிங்க, பிரேமரத்ன, ரத்னாயக்க , விமுர்த்தி ஷதிசாநாயக்க, ஷசுபிதரன் என்போரால் இவ்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இக் களஞ்சியத்தில் பெருந் தொகையான முதிரை . பாலை மற்றும் பல்வேறு மரக்குற்றிகள் பலகைகள் சுமார் 1820 வைத்திருந்தமை கண்டு பிடிக்கப்பட்டதுடன் இது தொடர்பாக கயுவத்தையைச் சேர்ந்த ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

வழக்குபொருள்கள் மற்றும் சந்தேக நபரும் மேலதிக நடவடிக்கைக்காக சிலாவத்துறை பொலிஸில் ஒப்படைக்கபட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

(05)



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இனியாவது விலகுவதே டக்ளஸுக்குப் பொருத்தம்

ஈபிடிபி கட்சியின் வாழ்நாள் செயலாளர் நாயகமும் அந்தக் கட்சியின்முன்னாள்அமைச்சருமானடக்ளஸ்தேவானந்தாவிற்கு, அடுத்துத் தாம் அமைக்கவுள்ள ஆட்சியில் அமைச்சுப் பதவி வழங்கவே மாட்டோம் என்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைமைப்பீட உறுப்பினர் பிமல் ரத்நாயக்க திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

தமது அரசுத் தலைவரை ஒரு முன்னாள் அமைச்சர் என்ற முறையில் சந்தித்துப் பேசிவிட்டு, தனக்கு அமைச்சுப் பதவி கிடைக்கவுள்ளது என்று கேவலமாகப் பொய் சொல்லி வருகின்றார் அமைச்சர் டக்ளஸ் என்று குற்றஞ்சாட்டியிருக்கிறார் பிமல் ரத்நாயக்க.

”டக்ளஸ் தேவானந்தா மட்டுமல்ல கடந்த காலத்தில் ராஜபக்ச அல்லது விக்கிரமசிங்கவின் ஆட்சிகளில் அமைச்சர்களாக இருந்து நாட்டை அழித்த எவருக்கும் அமைச்சுப் பதவியை வழங்குவதற்கு எமக்குப் பைத்தியம் இல்லை.

தேவானந்தா ஜனாதிபதியை சந்திக்க அவகாசம் கேட்டார். முன்னாள் அமைச்சர் ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருப்பதால் ஜனாதிபதி அவ்வாறான கோரிக்கைக்கு அனுமதி வழங்குவது அரசியல் தார்மீகமாகும். தேவானந்தா ஜனாதிபதியை சந்தித்தபோது ஜனாதிபதியுடன் இணைந்து புகைப்படம் எடுத்துக்கொண்டார். அதை அவர் வடக்கில் உள்ள பத்திரிகைகளில் வெளியிட்டார். முகநூலில் பதிவிட்டுள்ளார்.

ஜனாதிபதி அவருக்கு உதவுகிறார் என்று சொல்லி பெரும் விளம்பரப்படுத்தினார். ஜனாதிபதியிடம் தான் சில ஆவணங்களைக் கொடுத்தார் என்றும் மீன்பிடித்துறை அமைச்சராக இருந்தபோது தான் ஆற்றிய பணிகளைப் பற்றிப் பேசினார் என்றும் மக்களிடம் பொய் கூறினார். டக்ளஸ் தேவானந்தாவை நினைத்து வெட்கப்படுகிறோம்.

தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியில் இணைவேன் என்று இப்போது எல்லா இடங்களிலும் கூறி வருகிறார். டக்ளஸ் தேவானந்தாவுக்கு அமைச்சுப் பதவி வழங்க ஜனாதிபதிக்கோ எமக்கோ அதிகாரம் இல்லை. இந்தப் பொய் முடிவுக்கு வரும் என்று காத்திருந்தோம். ஆனால், டக்ளஸும் அவருடைய அடியாட்களும் இன்றும் எல்லா இடங்களிலும் இந்தப் பொய்யைத் தொடர்ந்து சொல்கிறார்கள்.

ராஜபக்சேவுடன் சேர்ந்து நாட்டை அழித்த அமைச்சர்களும் இருக்கிறார்கள். ராஜபக்ச, விக்கிரமசிங்க, மைத்திரிபால ஆகியோருடன் இணைந்து வடக்கை அழித்தது யார்? தேவானந்தா இலங்கையை அழித்த அமைச்சரவையின் முன்னாள் உறுப்பினர். டக்ளஸ் தேவானந்தா கடந்த தேர்தலில் ரணிலுக்கு உதவியவர். அவருக்கு ஒருபோதும் அமைச்சுப் பதவி கொடுக்கமாட்டோம்” என்று கூறியிருக்கிறார் விமல் ரத்நாயக்க.

ஒரு முன்னாள் அமைச்சர் வயதில் மூத்த அரசியல்வாதியான டக்களஸ் மீது இவ்வளவு மோசமான விமர்சனம், பதவிக்காகப் பொய் சொல்லும் கேவலமாக அரசியல் செய்யும் நபர் என்கிற குற்றச்சாட்டு அவரது ஆதரவாளர்களுக்கே விருப்புக்குரியதாக இருக்காது. தமிழ்த் தேசியம் பேசும் தமிழ்க் கட்சிகள் போலித் தேசியம்பேசுகின்றன, பொய்பேசிஏமாற்றுகின்றனஎன்றுஇதுவரை கூறிவந்த டக்ளஸைப் பார்த்து இன்று தெற்குக் கட்சி ஒன்று இவ்வளவு கேவலமான விமர்சனத்தை முன்வைக்குமளவிற்கு அவரது அரசியல் பலவீனப்பட்டுள்ளது தெரிகிறது.

கடந்த தேர்தலின்போதே, அடுத்த 5 வருடங்களில் தான் அரசியலில் இருந்து ஓய்வுபெற்றுவிடுவேன் என்று டக்ளஸ் தெரிவித்திருந்தார். அதை அவர் நிறைவேற்றியிருந்தால் இன்று இந்தளவுக்குக் கேவலமாக விமர்சனங்களை அவர் எதிர்கொள்ளாமல் இருந்திருக்கக்கூடும். சாகும் வரைக்கும் கட்சியின் தலைவராக இருக்கவேண்டும், தலைவராக இருக்கும் வரைக்கும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் வரவேண்டும், முடிந்தால் அமைச்சராகவும் பதவியில் தொடரவேண்டும் என்று அங்கலாய்த்துத் திரியாமல் அவர் அறிவித்தது போன்று அரசியலைவிட்டு ஒதுங்கி, கட்சியை இளம் தலைவர்களிடம் ஒப்படைப்பதே அவருக்கும் அவரது ஆதரவாளர்களுக்கும் நன்மையளிக்கும்.

# யாருக்கு வாக்களிப்பது?

அருட்பணி யோகேஸ்வரன், சிங்கம்

கடந்த ஜனாதிபதி தேர்தல் வரை சிறீலங்காவுக்கான ஜனாதிபதித் தேர்தல்களில் சிங்கள மக்கள் சிங்களத் தேசியக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியினதோ, சிறீலங்கா சுதந்திரக் கட்சியினதோ அல்லது அவற்றினால் உருவாக்கப்பட்டஒருகூட்டினதோவேட்பாளரையே ஜனாதிபதியாகத் தெரிவு செய்வதே வழக்கம்.

ஆனால் இம்முறை, ஜேவிபியின் பிடியிலுள்ள கூட்டு முன்னணியான தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளரும், ஜேவிபியின் தலைவருமான திரு அனுர குமார திசாநாயக்கவைச் சிங்கள மக்கள் ஜனாதிபதியாகத் தெரிவு செய்துள்ளனர். இது தமிழ் மக்கள் சிலரின் மத்தியில் சலசலப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

தங்களை இடதுசாரிகள் எனக் கூறிக் கொள்ளும் ஜேவிபி, அதற்கு முரணாக சிங்கள பௌத்த பேரினவாதத்தைத் தமது நடைமுறை அரசியலாகக் கொண்டவர்கள், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுப்பவர்கள். ஜேவிபி ஆரம்பம் முதலே தமிழ் மக்களை, குறிப்பாக மலையகத் தமிழர்களை சிறீலங்காவின் மீதான இந்தியாவின் ஆக்கிரமிப்புக்கான முகவர்கள் எனத் தமது உறுப்பினர்களுக்குப் போதித்து வருபவர்கள்.

ஜேவிபி இரண்டு தடவைகள் ஆயுதப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்ற முயன்று தோற்றவர்கள். பின்னர் 1990களில் தேர்தல் அரசியலில் காலடி வைத்தது. அதன் பின்பும் தமிழ் மக்கள் மீதான போர் உட்பட இன அழிப்பு செயற்பாடுகள் அனைத்துக்கும் ஆதரவும் பங்களிப்பும் வழங்கி வருகின்றது. சிறீலங்கா அரசு மற்றும் தமிழ்ப் பிரதிநிதிகளுக்கிடையில் அரிதாக இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள், கலந்துரையாடப்பட்ட இனப் பிரச்சினைக்கான தீர்வுகள் அனைத்துக்கும் எதிராக சிங்கள மக்களிடையே எதிர்ப்பலைகளை உருவாக்கி வந்துள்ளது. ஜேவிபி தமிழர் தாயகமான வடக்குக் கிழக்கின் இணைப்பைப் பிரித்தது. சுனாமிப் புனர்வாழ்வுச் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்காக உருவாக்கப்பட்ட சுனாமிக் கட்டமைப்பில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கு எதிராகவும் வன்னியில் அதன் தலைமை அலுவலகம் அமைக்கப்பட்டதற்கு எதிராகவும் நீதிமன்றம் வரை சென்று அக்கட்டமைப்பையும் இல்லாமலாக்கியது.

### சிறீலங்காவில் ஏற்பட்ட பொருளாதாரப் பேரழிவு

சிறீலங்கா 2022ல் பாரிய பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்தது. மக்கள் அன்றாட வாழ்க்கையைக் கொண்டு நடாத்துவதற்கான அனைத்துத்தேவைகளுக்கும்நீண்டவரிசைகளில் நாள் கணக்கில் காத்திருக்க வேண்டியேற்பட்டது. ஆயினும் பல அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்காத நிலைமை நிலவியது. சிங்கள தேசத்துடன் வலிந்து பிணைக்கப்பட்டுள்ளதால் தமிழர்களும் இந்தப் பொருளாதார நெருக்கடியில் தவிர்க்கவியலாதவாறு சிக்கித் தவித்தனர். ஏற்பட்ட நெருக்கடிகளால் விரக்தியடைந்த சிங்கள மக்கள் தன்னெழுச்சியாக வீதிகளிலிறங்கினர்.

கட்சிகள் குறிப்பாக,ஜேவிபியின் தே.ம.சக்தி, முன்னிலை சோசலிசக் கட்சி போன்றனவும்; அரசியல் விழிப்புணர்வும் ஆர்வமும் கொண்ட தன்னார்வஅமைப்புகளும்தொழிற்சங்கங்களும் செயற்பாட்டாளர்களும் சிங்கள மக்களின் தன்னெழுச்சியான போராட்டத்தில் இணைந்து கொண்டனர். இவர்களில் சிலரின் நோக்கம் அரகலயவின் வேகத்தை (momentum), தமது நலன்களுக்காக கையகப்படுத்துவது. இதனூடாக தமது தேர்தல் நலன்களுக்கு பயன் தரக்கூடிய வகையில் ‘இதுவரை ஆட்சியில் இருந்த சகல அரசியல்வாதிகளின் ஊழல்களால் மட்டும்தான் பொருளாதாரப் பேரழிவு ஏற்பட்டுள்ளது’ என்ற கருத்தை தேசிய மக்கள் சக்தி சிங்கள மக்கள் மத்தியில் நம்பக்கூடிய வகையில் உருவாக்கியது.

### பொருளாதாரப் பேரழிவின் உண்மையான காரணங்கள்

சிங்கள பௌத்த பேரினவாதம் தீவு முழுமையையும் சிங்கள பௌத்த மக்களுக்கு வாக்களிக்கப்பட்டது என நம்புகின்றது. இப்பேரினவாதச் சிந்தனைக்கு அமைய இத்தீவின் யதார்த்தமான பல்லினத் தன்மையை மறுப்பதுடன் ஏனைய தேசிய இனங்களின் இருப்பையும் நியாயமான உரிமைகளையும் மறுதலித்து இன அழிப்பைப் புரிகின்றது. ஆட்சிகள் மாறிய போதும் இன அழிப்பு நிகழ்ச்சி நிரலின்படியே சிறீலங்காவின் சகல துறைகளும் கடந்த எண்பது வருடங்களாக இயங்கி வருகின்றன.

இன அழிப்பு நோக்கில் ஆட்சியை நடாத்தியமையால் பாரிய நிதி விரயம், பொருளாதார மற்றும் அபிவிருத்தி வாய்ப்புகளின் இழப்பு, அதனால் அரசியல் மற்றும் நிதித் தேவைகளுக்காக நட்டத்தில் விற்கப்பட்ட தேசிய வளங்கள். அவற்றுடன் தமிழ் மக்களுக்கான உரிமைகளை வழங்கவே கூடாது என்ற ஓர்மத்தில் 30 வருடங்களாக தமிழ் மக்களுக்கு எதிராக நடாத்திய ஆயுதப்போருக்காக பெருமளவு வளங்கள் விரயமாக்கப்பட்டதுடன் பாரிய அழிவுகளும், பாரிய மனிதவள இழப்புகளும் (இறப்புகள், அங்கவீனம், வெளியேற்றம்) ஏற்பட்டன. இவற்றின் திரட்டிய விளைவாக பொருளாதாரம் பேரழிவுக்குட்பட்டது.

இவ்வாறு பேரினவாதத்தால் அபாயகரமான அளவில் நலிவடைந்து வந்த பொருளாதாரத்திற்கு பேரினவாத மயமாக்கப்பட்ட நிர்வாகத்தின் இலஞ்சமும் ஊழலும் அதன் விளைவான வினைத் திறனின்மையும் மேலதிக சுமைகளாயின. ஆனாலும் இலஞ்சம், ஊழல் வினைத்திறனின்மை என்பன பேரினவாதக் கதையாடல்களின் மூலம் சிங்கள மக்களிடமிருந்து மூடி மறைக்கப்பட்டது. அவர்களும் பேரினவாதக் கவர்ச்சியினால் கவனம் செலுத்தாதிருந்தனர்.

பொருளாதார வீழ்ச்சியின் மீட்பர்களாக நம்பப்படும் தேசிய மக்கள் சக்தி

பொருளாதாரப் பேரழிவுக்கு காரணம் ஊழலும் இலஞ்சமும் மட்டுமே என நம்பும் சிங்கள மக்கள் அதற்கு காரணமானதென தாம் நம்பும் பழைய அரசியற் தலைவர்களாலோ அவர்களது கட்சிகளாலோ பொருளாதார வீழ்ச்சியிலிருந்து தம்மை மீட்க முடியாது என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

இந்நிலையில் இதுவரை ஆட்சியில் அமர்ந்திராததும், அதனால் ஊழற் குற்றச் சாட்டுகளுக்கு உள்ளாகியிராததும், அரகலயவில் போராட்டக்காரர்களுடன் தோள் கொடுத்து நின்றதுமான தே.ம.சக்தியைப் பாரம்பரியத் தலைமைகளுக்கான மாற்றாகவும் பொருளாதாரப் பேரழிவின் மீட்பர்களாகவும் ஜேவிபி முன்னிறுத்தியது. சிங்கள மக்களுள் கணிசமானோர் இதை நம்பிக் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்துமுள்ளனர்.

அரகலயவில் வேறு பல கட்சிகளும் தனி நபர்களும் உழைத்திருந்தாலும், அரகலயவின் மொத்த விளைச்சலையும் தேசிய மக்கள் சக்தி என்ற புதிய முகத்தை முன்வைத்து ஜேவிபி கையகப்படுத்திக் கொண்டது.

### தே.ம.சக்தியின் ஜனாதிபதி தேர்தல் வெற்றியும் பொதுத் தேர்தலும்

தேசிய மக்கள் சக்தியினூடாக ஜே.வி.பி ஜனாதிபதிப் பதவியைப் பெற்றுக் கொண்டதும் சூட்டோடு சூடாகப் பாராளுமன்றத் தேர்தலை நடாத்தி ஜனாதிபதித் தேர்தலில் தமக்குச் சார்பாகத் திரண்ட சிங்கள மக்களின் ஆதரவையும் ஜனாதிபதிப் பதவியில் இருப்பவரின் கட்சி என்பதால் உருவாகக் கூடிய சாதகமான நிலையையும் பயன்படுத்தவும் தமது ஆட்சியின் பலவீனங்கள், வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமை அம்பலமாவதற்கான காலத்தை வழங்காமலும் தேர்தலைச் சந்திக்க விரும்பி தே.ம.சக்தி பொதுத் தேர்தலை உடனடியாக அறிவித்தது.

தொடரும் தமிழ் மக்கள் மீதான இன அழிப்பு

கடந்த எண்பது வருடங்களாக சிறீலங்கா அரசினதும் தொடர்ந்து வந்த ஆட்சியாளர்களதும் மூலாதார இயக்கு கொள்கையாக (Basic driving principle) இருப்பது சிங்கள பௌத்த மேலாண்மைக்கான அவாவே. இதற்காகவே அரசும் ஆட்சியாளர்களும் தமிழ் இன அழிப்பை பிரதான வேலைத் திட்டமாகக் கொண்டுள்ளனர்.

அரசானது மிகவும் நுணுக்கமாகத் திட்டமிட்டு குடியேற்றங்கள் மற்றும் பல்வேறு வழிகளில் நில அபகரிப்பினைத் தொடர்கிறது. தமிழ் மக்களின் மொழி, கல்வி, பண்பாடு, வரலாறு, பொருளாதாரம், இயற்கைச் சூழல் மற்றும் வளங்களை சிதைக்கிறது. தமிழர்களை

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

காலைக்கதிர் Kalaikkathir

# யாருக்கு வாக்களிப்பது?

4ம் பக்க தொடர்ச்சி...........

கொல்லுதல்,சித்திரவதை செய்தல்,காணாமற்போகச் செய்தல்,பயங்கரவாதத் தடைச் சட்டம் மூலம் தனி மனிதர்களினதும்குடும்பங்களினதும்வாழ்க்கையை சீரழித்தல் என தமிழ் மக்களின் இருப்பைச் சவாலுக்கு உட்படுத்துகிறது. அதீத இராணுவப் பிரசன்னம்,தமிழர்களையும் பிரதேசங்களையும் திட்டமிட்டு அபிவிருத்தி மற்றும் பொருளாதாரச் செயற்பாடுகளில் புறக்கணிப்பது,தமிழ் மக்களின் நலன்களுக்குப் பாதகமான அபிவிருத்திகளை (மன்னார் காற்றாலை,கடலட்டைப் பண்ணை போன்றன) மட்டும் தமிழ் நிலங்களில் பலவந்தமாக நிறைவேற்றுவது,திட்டமிட்ட போதைவஸ்துப் பரவலாக்கம் என தம்மாலியன்ற அனைத்து வழிகளிலும் தமிழ் மக்கள் மீதான இன அழிப்பை எப்போதும் தொடர்கின்றது.

இன்று வரை ஆட்சிக்கு வந்த எந்தவொரு சிங்கள அரசும் தமிழ் அழிப்பு வேலைத் திட்டங்கள் எதையும் கைவிட்டதில்லை. அதற்கேற்றவாறு ஆட்சியாளர்கள் மாறினாலும் தமிழ் இன அழிப்புத் தொடர்வதற்கு ஏற்றவகையில் அரச இயந்திரம் சிங்கள பௌத்த பேரினவாத இயந்திரமாக வலிமையாகக் கட்டமைக்கப்பட்டும் உள்ளது.

தற்காப்புக் கவசமாக தமிழ்த் தேசியமும் தீர்வாக தேசிய அபிலாசைகளும்

தமிழ் மக்கள் இன அழிப்பிலிருந்து தமது இருப்பையும்அடையாளத்தையும்பாதுகாப்பதற்காகத் தமக்கு உரித்தான தேசிய அடையாளங்களையும் தேசிய உரிமைக் கோரிக்கைகளையும் தமக்கான தற்காப்புக் கவசமாக முன்னிறுத்தினர்.

இன அழிப்பின் விளைவாக விழிப்படைந்த தமிழ் மக்கள் தனியான மொழி,உரித்தான தாயகம்,தனித்துவமான வரலாறு மற்றும் பண்பாடு,பொருளாதாரக்கட்டமைப்புஆகியவற்றைக் கொண்டுள்ளமையின் அடிப்படையில் தாம் ஒரு தனியான தேசிய இனம் என்ற உரிமையைக் கோரி எழுச்சியுற்றனர். இன அழிப்பிலிருந்து தம்மைப் பாதுகாப்பதற்கான ஒரே வழிமுறையாக தேசிய இனம் என்பதால் தமக்கு உரித்தாகும் இறைமை மற்றும் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுயாட்சிக்கான அரசியல் முறைமை ஒன்றைத் தீர்வாகக் கோரிப் போராடத் தொடங்கினர்.

இன்றுவரை தமிழ் மக்கள் எப்போதும் தமிழ்த் தேசிய அடையாளத்தையும் தமிழ்த் தேசிய அபிலாசைகளையும்விட்டுவிலகியதில்லை. அதுவே தமிழ் மக்களின் இருப்புக்கான போராட்டத்தின் ஆதாரமாக,அடிநாதமாக,இயக்கு சக்தியாக உள்ளது.

சிறீலங்காவின்அரசியல்யாப்பின்ஒற்றையாட்சித் தன்மையானது சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கே எப்போதும் ஊழியம் செய்யும் என்பதனாலும் அதன் ஒரு அங்கமான 13ம் திருத்தத்தின் மூலமான மாகாண சபை முறைமை தமிழ் மக்களை இன அழிப்பிலிருந்து பாதுகாப்பதற்கான வலிமை கொண்டதல்ல என்பதனாலும் எமக்கான அரசியற் தீர்வில் இவை ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவை எனத் தமிழ் மக்கள் மீள மீள வலியுறுத்தி வருவதற்கும் இதுவே காரணமாகும்.

சிங்கள அரசுகள் தமிழ் மக்கள் மத்தியில் இன அழிப்பின் விளைவாகத் தோன்றிய நாம் இன அழிப்புக்கு உள்ளாகின்றோம் என்ற விழிப்புணர்வையும்,தமிழ்த் தேசிய அடையாள அரசியலின் வளர்ச்சியையும்,தமிழ் மக்களின் உரிமைகளை உள்ளடக்கிய தமிழ்த் தேசிய அபிலாசைகளையும் கண்டு அஞ்சுகின்றது. இந்த விழிப்புணர்வு தமது இன அழிப்பு நிகழ்ச்சி நிரலுக்கு அபாயமானதென அரசு கருதுகின்றது. தமிழ் மக்களின் விழிப்புணர்வை அற்றுப் போகச் செய்ய வேண்டும் என்பதற்காக மூளைச் சலவை செய்யும் பல வேலைத் திட்டங்களை பல்வேறு வழிமுறைகளூடாகஅரசுமுன்னெடுத்துவருகின்றது.

ஆனாலும் இன்றுவரை இடம்பெற்ற பொதுத் தேர்தல்களின் போதெல்லாம் தமிழ் மக்கள் தமது ஒற்றைக் கொள்கையான தமிழ்த் தேசியத்தின்பால் அணி திரண்டு வாக்களிப்தே வழமை. ஆரம்பத்தில் தமிழரசுக் கட்சி,பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி,பின்னர் 1989 பொதுத் தேர்தலில் வெளிச்ச வீட்டுச் சின்னத்தில் சுயேட்சையாகப் போட்டியிட்ட ஈழப்புரட்சி அமைப்பு,நீண்ட இடைவெளியின் பின் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆசியுடன் கூட்டாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு,இன்று பல்வேறு தரப்புகளாகச் சிதறியுள்ளபோதும் தமிழ்த்தேசியத்தை தமது கொள்கை எனக் கூறும் முன்னாள் கூட்டமைப்பின் உறுப்புக் கட்சிகள் என,தமிழ்த் தேசியத்தின் பால் உறுதியாக நிற்பவர்கள் என தாம் நம்புபவர்களுக்கே இதுவரை வாக்களித்து வருகின்றார்கள்.

### தேர்தல் தொடர்பாக முடிவு செய்வதில் தமிழ் மக்கள் மத்தியில் தடுமாற்றம்???

பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின் தமிழ் மக்கள் மத்தியில் தாம் இதுவரை கட்டிக் காத்த தமிழ்த் தேசிய அடையாளம் மற்றும் அபிலாசைகள் பற்றிக் குழப்பம் ஏற்பட்டுள்ளதாகக் காட்ட பல்வேறு சக்திகள் தீவிரமாக முயற்சிக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள மக்கள் வெளிப்படுத்தியுள்ள கணிசமான மாற்றம்,ஊழலை ஒழிப்பதன் மூலம் நாட்டைச் சுபீட்சமடையச் செய்வோம் என்ற கோசம் மற்றும் வழமையான அனைவரும் சமம்,அனைவருக்கும் அபிவிருத்தி போன்றகோசங்களை முன்வைக்கும்தேசிய மக்கள் சக்தியின் பிரசாரங்களால் சிலர் தடுமாறுகின்றார்கள். 2009ன் பின் நடந்த பொதுத் தேர்தல்களில் தமிழ்த் தேசியத்தின் காவலர்களாகக் காட்டி தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் சென்றவர்களால் தமிழர் தாயகத்திற்கு எந்த விதமான பாரிய அபிவிருத்தியையும் கொண்டு வர முடியாமல் உள்ளமைக்கு அப்பிரதிநிதிகளது திறமையின்மையே காரணம் என்று பரப்பப்படும் யதாரத்தமற்ற கருத்துகளை நம்புவதாலும் இதுவரை காலமும் தேசியத்திற்கான வாக்கைப் பெற்று வென்றவர்கள் சிலரது ஒழுக்கமற்ற,தமிழ்த் தேசியத்திற்குப் பிறழ்வான நடத்தைகளாலும் தமிழ்த்தேசியத்திற்கான கட்சிகள் என நம்பப்படும் கட்சிகளினுள் அதிகரித்து வரும் பிளவுகளாலும் சிலர் விரக்தியுற்றுள்ளமையால் தடுமாறுகின்றார்கள். இன்னும்சிலரோதமதுநண்பர்,உறவினர்தேர்தலில் நிற்கிறார் நேரில் வந்து வாக்குக் கேட்டுவிட்டார் என்பதற்காக முடிவெடுப்பதில் தடுமாறுகின்றார்கள். இவர்களே இத்தனை காலமாக தியாகங்களால் கட்டிக் காத்துவந்த தமிழ்த் தேசியத்தைத் காப்பதற்காக வழமைபோல் வாக்களிப்பதா அல்லது தமிழ்த் தேசியத்திற்கு எதிராக வாக்களிப்பதா எனக் குழம்பி நிற்கின்றனர்.

### புற்றீசல் போல முளைத்துள்ள சுயேட்சைக் குழுக்கள்

2009ன் பின் அனைத்துத் தேர்தல்களிலும் தமிழர் தாயகத்தில் தமிழ்த் தேசியத்துக்கான வாக்குகளைச் சிதறடிக்கும் நோக்கில் அரசால் பெரும் எண்ணிக்கையில் சுயேட்சைக் குழுக்கள் களமிறக்கப்படுவது வழமையாகிவிட்டது. இம்முறை இக் குழுக்களின் எண்ணிக்கை மேலும் பன்மடங்கு அதிகரித்துள்ளது.

இவர்களுள் பலர் வழமைபோல் தமிழ்த் தேசியத்துக்கான வாக்குகளைச் சிதறடிக்கும் நோக்குடன் அரசால் களமிறக்கப்பட்டவர்கள். இவ்வாறானவர்கள் இதுவரை தமிழருக்கோ தமிழ்த் தேசிய அரசியலுக்கோ எந்த வகையிலான பங்களிப்பையும் நல்காதவர்கள் அல்லது எதிரிகள்,ஆனால் தேர்தலில் வென்று தமிழ்த் தேசியத்தைத் தாமே காக்கப் போவதாக சிலரும் இதுவரை தமிழ் மக்களுக்குக் கிடைக்காத அபிவிருத்திகளையெல்லாம் தாம் பெற்றுத் தரப் போவதாக சிலரும் கூறி வாக்குக் கேட்கின்றனர்.

வேறு சிலர் சில சமூகப் பணிகளைச் செய்ததனாலும் நிவாரணங்களைக் கொடுத்ததனாலும் சமூக ஊடகங்களில் பிரபல்யமாக உள்ளதாக நம்புவதாலும் தேர்தலில் தம்மால் வெற்றி பெற முடியும் என அப்பாவித்தனமாக நம்பி,தமக்கெனத்தனியானசுயேட்சைக்குழுக்களை உருவாக்கிக் களமிறங்கியுள்ளவர்கள். சிலர் புலம்பெயர் தமிழரின் நிதியைக் கையாடுவதற்கான ஒரு வழியெனவும் இன்னும் சிலர் புகலிடக் கோரிக்கைகள்வெற்றிபெறுவதற்கானவாய்ப்புகளை பிரகாசமாக்குவதற்காகவும்சுயேட்சைக்குழுக்களாகக் களமிறங்கியுள்ளனர்.

இவர்கள் பலர் தனிப்பட்ட தமது நண்பர்கள்,பாடசாலைச் சமூகத்தவர்கள், உறவினர்கள்,ஊரவர்,ஒன்றாகப் பணிபுரிந்தவர்கள் எல்லோருமே தமிழ்த் தேசிய அபிலாசைகளையெல்லாம் கைவிட்டுவிட்டுத் தமக்கு வாக்களிப்பர் என நம்புகின்றனர்.

### சிறிய அளவில் தோன்றியுள்ள தடுமாற்றத்தை விரிவாக்குவதற்கான சதி

தமிழ் மக்கள் சிலரிடையே தோன்றியுள்ள இந்தத் தடுமாற்றத்தால் தமிழ் இன அழிப்புச் சக்திகளும் இவர்களின் கைக்கூலிகளும் அதிகார அடிவருடிகளும் ஊக்கம் பெற்றுள்ளனர். ஏற்கனவே தமிழ் மக்களை தமிழ்த் தேசிய அரசியல் நீக்கம் செய்வதற்காக மூளைச் சலவை செய்துவரும் இச்சக்திகளுடன் இணைந்து தேசிய மக்கள் சக்தியும்,சிறிய அளவில் தற்காலிகமாக ஏற்பட்டுள்ள இத்தடுமாற்றத்தை மேலும் பரவலாக்குவதற்காகப் பல்வேறு சதி நடவடிக்கைகளைச் செயற்படுத்தி வருகின்றனர்.

இதற்காகப் பலநூறு சமூக வலைத் தளங்களும் பிரச்சாரகர்களும் புதிதாக உருவாக்கப்பட்டு களமிறக்கப்பட்டுள்ளனர்.

### தமிழர் தாயத்தில் தே.ம.சக்தியின் திட்டம்

தமிழ்த் தேசிய அரசியல் நீக்கம்,தமிழ் வாக்குகளைச் சிதறடிப்பது போன்ற நோக்கங்களிற்கு மேலதிகமாக தே.ம.சக்தி தமிழர் தாயகத்தில் ஏற்பட்டுள்ள சிறிய குழப்பங்களைச் சாதகமாகப் பயன்படுத்தி,தமிழ் மக்களின் வாக்குகளைக் கொள்ளையடித்து ஒரு சில ஆசனங்களையாவது பெற்றுத் தமது பாராளுமன்றப் பெரும்பான்மையையும் உறுதிப்படுத்தலாம் என்ற எதிர்பார்ப்பிலும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது.

தே.ம.சக்தி,இதுவரைதமிழ்த்தேசியத்திற்காகவோமக்களுக்காகவோ சிறு துரும்பைத்தானும் நகர்த்தியிராத,எமது சமூகத்தில் சிறிய அளவில் மட்டும் அறியப்பட்ட,சலன புத்தியுள்ளவர்கள் சிலரை ஊழலற்றவர்கள் என்ற போலி அடையாளமிட்டுத் தமது வேட்பாளர்களாகத் தமிழர் தாயகமெங்கும் களமிறக்கியுள்ளது.

இவர்களுள் யாராவது துர்லபமாக வெற்றிபெற்றாற்கூட அவர்களால் தமிழர்கள் மேலான இன அழிப்புத்துன்பங்களுக்கு தீர்வெதையும் பெற்றுத் தர முடியாது,திட்டமிட்டு இன அழிப்பு நோக்கங்களுக்காக தடுக்கப்பட்டுள் பாரிய அபிவிருத்திகளையும் இம்மண்ணிற்கு கொண்டுவர முடியாது. மாறாக எப்போதும் இணக்க அரசியல் பேசுபவர்கள் செய்வதைப் போல தமது தேவைகளையே பூர்த்தி செய்து கொள்ள முடியும். மேலும் அரசு இவர்களது ஆள்கள் சிலருக்கு சில தனிப்பட்ட சலுகைகளை இவர்க;டாக வழங்கி இவர்களுக்கான ஒரு வாக்கு வங்கியை உருவாக்க உதவி செய்வது மூலம் தமிழ்த் தேசியத்துக்கான வாக்கு வங்கியைச் சிதறடிக்கும்.

இவர்களுக்கு வளங்கப்படும் வாக்கு அரசின் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் நன்றிக்கடனாக தமது எஜமானர்களின் தமிழ் இன அழிப்புச்செயற்பாடுகள் தொடர்வதற்கு உதவுபவர்களாகவும்,அவர்களது பாவங்களுக்கு வெள்ளையடிப்பவர்களாகவும் இவர்கள் செயற்படுவர். தே.ம.சக்தி வேட்பாளர்களிற் சிலர் தமது எஜமானர்களால் தமக்கு வழங்கப்பட்ட தமிழ்த் தேசிய அரசியல் நீக்கப் பணிகளை ஏற்கனவே செய்யவும் தொடங்கி விட்டனர்.

இற்றைவரை ஜேவிபியோ அல்லது அதன் இன்னொரு வடிவமான தேசிய மக்கள் சக்தியோ தமது பேரினவாத நிலைப்பாடுகளைக் கைவிட்டதாகவோ,அவை இறந்த காலமெனவோ அறிவிக்கவில்லை. தமது பேரினவாத நிலைப்பாடு தவறென்று ஒப்புக் கொள்ளவோ அதற்காகத் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்கவோ இல்லை. காலங்காலமாகச் சிறீலங்கா அரசுகள் தொடர்ந்து புரிந்து வருகின்ற தமிழ் இன அழிப்பை நிறுத்துவோம் எனவோ அவற்றாலேற்பட்ட பாதிப்புகளுக்கு தீர்வைத் தருவோம் எனவோ கூறவில்லை. ஆகக் குறைந்தது இங்கு ஒரு இனப்பிரச்சினையுள்ளது,அதற்கு ஒரு அரசியற் தீர்வு தேவை என்றுகூட வெளிப்படையாகக் கூறவில்லை.

ஆனால்,கடந்த ஜனாதிபதி தேர்தலில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதாகக் கூறிய தற்போதைய ஜனாதிபதி,பதவிக்கு வந்ததும் அதைத் தொடரவுள்ளதாக அறிவித்ததும் அவரின் மூத்த கட்சித் தோழர்கள் தமிழ் மக்களுக்கு அரசியற் தீர்வு தேவையில்லை எனக் கூறியதும் வரப்போகும் ஆபத்தை முன்னறிவிக்கின்றது.

ஆக,தே.ம.சக்தியும் முன்னர் ஆட்சியிலிருந்த சிங்கள ஆட்சியாளர்கள் நுனி நாக்கால் கூறும் 'அனைவரும் சமம்,அனைத்து இனங்களுக்கும் சம உரிமை,அனைவரும் சிறீலங்கர்கள் என்ற அடையாளத்தை உருவாக்குவோம்,அனைவருக்கும் அபிவிருத்தி கிடைக்கச் செய்வோம்' போன்ற வழமையான கோசங்களைத் தவிர புதிதாக எதையும் தமிழ் மக்களை நோக்கி இன்றுவரை தே.ம.சக்தி கூறவில்லை.

ஆகவே தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிப்பது?

தமிழ் மக்கள் இம்முறை முன்னரெப்போதையும் விட கவனமாகச் செயற்பட வேண்டியுள்ளது. தேர்தலில் போட்டியிடுகின்றவர்களுள் தமிழ்த் தேசிய அபிலாசைகளைக் கட்சிக் கொள்கைகளாகக் கொண்ட,மறைமுகமாகவேனும் தமிழ்த் தேசியத்திற்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிராத,சிங்கள அரசின் கைக்கூலிகளாக இயங்கிக் கொண்டிராத,மக்களுக்கு கூறுவது போல தமிழ்த் தேசியக் கொள்கையில் உறுதியாக உள்ள கட்சிகள் சிலவே உள்ளன.

சில கட்சிகளும் அவற்றின் வேட்பாளர்களும் தேர்தல் வந்தால் மட்டுமே தமிழ்த் தேசியத்தைப்பற்றிப் பேசுவர். தேர்தல் மேடைகளில் மட்டும் சமஷ்டியே தீர்வு,தமிழ் மக்களுக்கெதிராக இன அழிப்பு நடைபெறுகிறது,சர்வதேச விசாரணை வேண்டும் என்று கூறுவர். பின்னர் கதிரைகள் கிடைத்ததும் வேடங்களைக் கலைநத்து ஒற்றையாட்சிக்குட்பட்டும் 13ம் திருத்தத்துக்குள்ளும் தீர்வைத் தேடுபவர்களாகவும்,இன அழிப்பு நடைபெறவில்லை என்றும் சர்வதேச விசாரணை முடிந்துவிட்டது என்றும் ஒற்றையாட்சிக்கான ஒத்தகருத்துச் சொல்லுக்கு புது வியாக்கியானமளித்தும் அரச ஒத்தோடிகளாக மாறுவர். இத்தகைய வேட்பாளர்களும் அவர்களின் கட்சிகளும் நிராகரிக்கப்பட வேண்டியவர்கள்.

ஆகவே தமிழ் மக்கள் வாக்களிப்பதற்கான தெரிவை அனுபவ அறிவினூடாக செய்யும் போது போட்டியிலுள்ள மிகச் சில கட்சிகளும் அவற்றின் வேட்பாளர்களும் மட்டுமே தமிழ்த் தேசிய அரசியலுக்கும் அபிலாசைகளுக்கும் எப்போதும் விசுவாசமாகச் செயற்படுபவர்களாக இருப்பர்.

ஆகவே தமிழ்த் தேசிய அரசியற் கொள்கையிலிருந்து ஒருபோதும் விலகாது தடுமாற்றமேதுமின்றி தொடர்ந்து உயரிய உறுதியுடன் நிற்கும் கட்சிகளுக்கு உங்கள் வாக்குகளை வழங்க வேண்டும் எனத் தமிழ் சிவில் சமூக அமையத்தினராகிய நாம் எமது மக்களை பணிவன்புரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சிங்கள இனவாதம், சிறீலங்கர் என்ற பொதுத் தேசியவாதம், போலிச் சம உரிமைவாதம், அர்த்தமற்ற பொருளாதார அபிவிருத்திவாதம் என்பவற்றைத் தவிர்த்து

தமிழ்த் தேசியத்துக்கு மட்டுமே வாக்களியுங்கள்

காலைக்கதிர் Kalaikkathir

# திரிபோஷா நிறுவனத்தை மூட அரசு எடுத்த முடிவை மீள்பரிசீலனை செய்யவேண்டும்

## ராஜித்த கோரிக்கை



திரிபோஷா நிறுவனத்தை மூடிவிட எடுத்திருக்கும்தீர்மானம்தொடர்பில்அரசாங்கம் மீள் பரிசீலனை செய்ய வேண்டும். இது சிறுவர்களின் போஷாக்கு தேவைக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில்அமைந்துள்ளபுதியஜனநாயக முன்னணிதேர்தல்வழிநடத்தல்காரியாலயத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

திரிபோஷா நிறுவனத்தை மூடிவிடுவதற்கு அல்லது ஒடுக்கிவிடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. திரிபோஷா இந்த நாட்டில் பாரம் குறைந்த சிறுவர்கள், கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்களின் போஷாக்கை கருத்திற்கொண்டுஅரசாங்கத்தால்வழங்கப்படும் வேலைத்திட்டமாகும்.

போஷாக்கு என்ற அடிப்படையில் நாங்கள் திரிபோஷா மாத்திரமே கொடுத்து வருகிறோம். அதனை நிறுத்துவது எதிர்காலத்தில் பாரிய போஷாக்கு குறைபாட்டு பிரச்சினைக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும்.

எமதுநாட்டில்மாதம்ஒன்றுக்கு1.6மில்லியன் திரிபோஷா பொதி விநியோகிக்கப்படுகிறது. 2015 காலத்தில் இதன் அளவு 70வீதமாகவே இருந்தது. என்றாலும் 2016இல் நான் சுகாதார அமைச்சராக வந்தபோது யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் திரிபோஷா திட்டத்தைவிரிவுபடுத்தநடவடிக்கைஎடுத்தேன். இதன்மூலம் உற்பத்தி அளவை 100வீதமாக அதிகரிக்க நடவடிக்கை எடுத்தேன்.

திரிபோஷா நிறுவனம் லாபமீட்டும் நிறுவனம் அல்ல. என்றாலும் திரிபோஷா போன்றே சுவ போஷா என்ற சத்துணவை அறிமுகப்படுத்தி இந்த நிறுவனத்தை லாமீட்ட நடவடிக்கை எடுத்தேன். என்றாலும் நட்டத்தில் இருக்கும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்கும் திட்டத்தில் திரிபோஷா நிறுவனமும் உள்ளடக்கப்பட்டபோது நான் தலையிட்டு அதனை நிறுத்தினேன். தனியார் நிறுவனங்கள் பல திரிபாஷோ நிறுவனத்தை விலைக்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்திருந்தன. என்றாலும் அதற்கு நாங்கள் இடமளிக்கவில்லை.

தற்போதுமக்கள்விடுதலைமுன்னணியின் விபாரிகள் சிலரே இந்த நிறுவனத்தை மூடிவிட ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கி இருக்கவேண்டும். தற்போதுஇதனைமூடிவிட்டு சில காலங்களில் தனியாருக்கு விற்பனை செய்வதே இவர்களின் திட்டமாக இருக்கலாம். இடதுசாரிகொள்கையுடைஜனாதிபதிஒருவரின் ஆட்சியில், வறுமையில் இருக்கும் மக்களுக்கு இலவசமாக வழங்கப்படும் திரிபாஷோ சத்துணவை நிறுத்த நடவடிக்கை எடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. – என்றார். (05)

# கோடாவுடன் ஒருவர் களுத்துறையில் கைது

களுத்துறை வடக்கு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பஓஹருபொல பிரதேசத்தில் சட்டவிரோத மதுபானம் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் கோடாவுடன் சந்தேக நபரொருவர் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை வடக்கு பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர்களுத்துறை, கல்பாத பிரதேசத்தில் வசிக்கும் 47 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரிடமிருந்து சட்டவிரோத மதுபானம்தயாரிப்பதற்குப்பயன்படுத்தப்படும் 1,080 லீற்றர் கோடா (06 பீப்பாய்கள்) பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதுதொடர்பானமேலதிகவிசாரணைகளை களுத்துறைவடக்குபொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# ரூ. 8 லட்சம் பெறுமதியான கஞ்சாவுடன் மன்னாரில் நபரொருவர் கைதானார்



மன்னார் நகரில் சுமார் எட்டு லட்சம் ரூபா பெறுமதியான கேரளா கஞ்சாவுடன் சந்தேக நபரொருவர் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக தெரிய வருவ தாவது –

மன்னார் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் திருகோணமலைப் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகளும் இணைந்து மன்னார் நகரில் மேற்கொண்ட சோதனையில் கற்பிட்டி பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சந்தேகநபரிடம்சுமார்எட்டுலட்சம்ரூபா பெறுமதியான கேரளா கஞ்சாவை மன்னார் நகர் பகுதியில் தன் வசம் வைத்துக் கொண்டு விற்பனை செய்வதற்காக வைத்திருந்த பொழுதே கைது செய்யப்பட்டார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரையும் கேரள கஞ்சாவுடன் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் பொலிஸ்நிலையத்தில்ஒப்படைக்கப்பட்டுள்ளார். (05)

# சுற்றுலாவிகளின் விருப்பத்துக்குரிய நாடாக முதலிடம் பிடித்த இலங்கை

லண்டனில்நடைபெற்றவொன்டர்லஸ்ட் ரீடர் டிரவல் விருதுகள் விழாவில் உலக சுற்றுலாப்பயணிகளிடையே மிகவும் விரும்பத்தக்க தீவு நாடாக இலங்கை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இந்தவிருதுகளில்இலங்கைமிகவும்விரும் பத்தக்க தீவுக்கான தங்க விருதை வென் றுள்ளது. கடந்த வருடம் இந்தப் போட்டியில் எட்டாவது இடத்திலிருந்த இலங்கை இவ்வாண்டு முதலிடத்தைப் பெற்றுள்ளது.

இரண்டு லட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகளால் வாக்களிக்கப்பட்டு இந்த விருது இலங்கைக்கு கிடைத்துள்ளது. மேலும்ஆஸ்திரேலியாமிகவும்விரும்பத்தக்க நாடாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், டோக்கியோ மிகவும் விரும்பத்தக்க நகரம் என்ற விருதையும் பெற்றுக் கொண்டுள்ளது. (05)

# பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் கைதானார்

பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 'வென்தேசிவத்த சுத்தா' என்பவர் துப்பாக்கி மற்றும் கூரிய ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என களுத்துறை பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

களுத்துறை பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் களுத்துறை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், களுத்துறை,வென்தேசிவத்த பிரதேசத்தில் உள்ள வீடொன்றிலிருந்து மேலும் இரண்டு கூரிய ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் களுத்துறை, நாகொடை, பயாகலை மற்றும் வென்தேசிவத்த ஆகிய பிரதேசங்களில்பல்வேறுநபர்களிடம்துப்பாக்கி மற்றும் கூரிய ஆயுதங்களைக் காண்பித்து அவர்களை அச்சுறுத்தித் தாக்கியுள்ளதாக பொலிஸ்விசாரணையில்தெரியவந்துள்ளது.

இந்நிலையில், சந்தேக நபர் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பயாகலை பிரதேசத்தில்உள்ளவீடொன்றிற்குள்அத்துமீறி நுழைந்து அங்கிருந்த நபரொருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கி காயப்படுத்தியுள்ளார் எனப் பொலிஸ் விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# போலி நுழைவுச்சீட்டை பயன்படுத்தி பிரான்ஸ் செல்ல முயன்றவர் கைது

போலி நுழைவுச்சீட்டை பயன்படுத்தி பிரான்ஸுக்குதப்பிச்செல்லமுயன்றஇளைஞன் ஒருவன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களஅதிகாரிகளால்வெள்ளிக்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை பிரதேசத்தில் வசிக்கும் 23 வயதுடைய இளைஞன் ஆவார்.

இந்த இளைஞன் வெள்ளிக்கிழமை இரவு 08.35மணியளவில்இந்தியாவின்சென்னை நகரை நோக்கிச் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது விமான நிலைய அதிகாரி களால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கொண்டு வந்த பயணப் பொதியில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போலியாகத் தயாரிக்கப்பட்ட பிரான்ஸ் நுழைவுச்சீட்டு ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபரான இளைஞன் இந்த போலி நுழைவுச்சீட்டை பயன்படுத்தி பிரான்ஸுக்கு தப்பிச் செல்ல தயாராக இருந்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட இளைஞன் மேலதிக விசாரணைகளுக்காகக் குற்றப்புலனாய்வுதிணைக்களஅதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (05)

# லொறி – மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் சாவு

ஹங்வெல்ல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட எம்புல்கம – பனாகொடை வீதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளார் என ஹங்வெல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து புதன்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

பனாகொடையிலிருந்து எம்புல்கம நோக்கிப் பயணித்த லொறி ஒன்று வீதியின் இடது பக்கமாகத் திரும்ப முயன்ற போது மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியதில் மோட்டார் சைக்கிளானது வீதியை விட்டு விலகிக் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தின் போது மோட்டார் சைக்கிளின் செலுத்துனரும் பின்புறத்தில் அமர்ந்திருந்த இளைஞனும் படுகாயமடைந்துள்ள நிலையில் ஹோமாகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் பின்புறத்தில் அமர்ந்திருந்த இளைஞன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் ருவன்வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞன் ஆவார்.

இதனையடுத்து, லொறியின் சாரதி சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணை களைஹங்வெல்லபொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# மெல்போர்னுக்கான விமானம் ரத்து

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரத்தை நோக்கி சனிக்கிழமை அதிகாலை பயணிக்கவிருந்த விமானம் ஒன்று தொழினுட்ப கோளாறு காரணமாக இரத்து செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானச் சேவைக்குச் சொந்தமான யு.எல் 604 என்ற விமானமே இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இதன்போது, விமானத்திலிருந்த சில பயணிகளை வேறொரு விமானத்தின் ஊடாக மெல்போர்ன் நகரத்திற்கு அனுப்பி வைக்க ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானச் சேவை நடவடிக்கை எடுத்துள்ளது.

எஞ்சிய பயணிகளை இன்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை 12.30 மணியளவில் ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விமான நிலையத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(05)


பாராளுமன்றத்தில்
நீதிமன்றத்தில்
மக்கள் மன்றத்தில்
தமிழருக்காய் ஒலிக்கும் குரல்
அடையாளம் மாறாத அரசியல் மாற்றம்
சுமந்திரன்
X
1

## டக்ளஸுக்கு. ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

டக்ளஸ் தேவானந்தா மட்டுமல்ல கடந்த காலத்தில்ராஜபக்சஅல்லதுவிக்கிரமசிங்கவின் ஆட்சிகளில் அமைச்சர்களாக இருந்து நாட்டை அழித்த எவருக்கும் அமைச்சுப் பதவியை வழுங்குவதற்கு எமக்குப் பைத்தியம் இல்லை.

தேவானந்தா ஜனாதிபதியை சந்திக்க அவகாசம் கேட்டார். முன்னாள் அமைச்சர் ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருப்பதால் ஜனாதிபதி அவ்வாறான கோரிக்கைக்கு அனுமதி வழுங்குவது அரசியல் தார்மீகமாகும். தேவானந்தா ஜனாதிபதியை சந்தித்தபோது ஜனாதிபதியுடன் இணைந்து புகைப்படம் எடுத்துக்கொண்டார். அதை அவர் வடக்கில் உள்ள பத்திரிகைகளில் வெளியிட்டார். முகநூலில் பதிவிட்டுள்ளார்.

ஜனாதிபதிஅவருக்குஉதவுவதாகச்சொல்லி பெரும் விளம்பரம் எடுத்தார். ஜனாதிபதியிடம் தான் சில ஆவணங்களைக் கொடுத்தார் என்றும் மீன்பிடித்துறை அமைச்சராக இருந்தபோது தான் ஆற்றிய பணிகளைப் பற்றிப் பேசினார் என்றும் மக்களிடம் பொய் கூறினார். டக்ளஸ்தேவானந்தாவைநினைத்து வெட்கப்படுகிறோம்.

தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியில் இணைவேன் என்று இப்போது எல்லா இடங்களிலும் கூறி வருகிறார். டக்ளஸ் தேவானந்தாவுக்கு அமைச்சுப் பதவி வழங்க ஜனாதிபதிக்கோ எமக்கோ அதிகாரம் இல்லை. இந்தப் பொய் முடிவுக்கு வரும் என்று காத்திருந்தோம். ஆனால், டக்ளஸும் அவருடைய அடியாட்களும் இன்றும் எல்லா இடங்களிலும் இந்தப் பொய்யைத் தொடர்ந்து சொல்கிறார்கள்.

ராஜபக்சேவுடன் சேர்ந்து நாட்டை அழித்த அமைச்சர்களும் இருக்கிறார்கள். ராஜபக்ச, விக்கிரமசிங்க, மைத்திரிபால ஆகியோருடன் இணைந்து வடக்கை அழித்தது யார்? தேவானந்தா இலங்கையை அழித்த அமைச்சரவையின் முன்னாள் உறுப்பினர். டக்ளஸ் தேவானந்தா கடந்த தேர்தலில் ரணிலுக்குஉதவியவர். அவருக்குஒருபோதும் அமைச்சுப் பதவி கொடுக்கமாட்டோம்.

இவர் மட்டுமல்ல, ராஜபக்ச காலத்தில் அமைச்சராக இருந்தவரான ரிஷாத் பதியுதீனும் இவ்வாறான பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றார். தன்னைச் சந்திக்க அனுமதி கேட்டு தொலைபேசி மூலம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார். சுமந்திரனின் ஆதரவாளர்களும் ஸ்ரீதரனின் ஆதரவாளர்களும்கூட இதையே செய்கிறார்கள் என்று கேட்கப்படுகிறது. நீங்கள் திசைகாட்டிக்குவாக்களித்தால், மற்றவர்களுக்கு ஏன் வாக்களிக்க வேண்டும்? திசைகாட்டியிடம் கொடுத்தால் முடிந்துவிட்டது..

திசைகாட்டி என்பது திசைகாட்டி தவிர வேறில்லை. அமைச்சர்களும்ஒரேதிசைகாட்டி கொண்டவர்களாகவே இருப்பார்கள் - என்றார்.

## மண்சரிவு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பஹதஹேவாஹட்டநுவரெலியமாவட்டத்தின் வலப்பனை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு இரண்டாம் நிலை எச்சரிக்கை அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பதுளை மாவட்டத்தின் ஹல்தும்முல்லை, வெலிமடை, லுணுகல, பண்டாரவளை, கண்டி மாவட்டத்தில் ஹரிஸ்பத்துவ, தெல்தோட்டை கேகாலை மாவட்டத்தின் கேகாலை, தெஹியோவிட்ட, புளத்கொஹுபிட்டிய, வரகாபொல, யட்டியந்தோட்டை, ருவன்வெல்ல,தெரணியாகல, அரநாயக்க, கலிகமுவ, ரம்புக்கன, மாத்தளைமாவட்டத்தின் ரத்தோட்டை இரத்தினபுரி மாவட்டத்தின் எஹலியகொடை, குருவிட்ட இரத்தினபுரி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு எச்சரிக்கையாக இருக்குமாறு முதல் நிலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## தனிநபரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த மக்கள் மன்றம் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் நிறைவுக்கு வந்ததன் பின்னர் நான் கட்சிக்குள் உள்வாங்கப்பட்டேன். கொழும்புக் கிளையின் தலைவராக நியமிக்கப்பட்டேன். மத்திய குழு உறுப்பினர் உள்ளிட்ட பல பதவிகளைத் தந்தார்கள். எந்தப் பதவியையும் நான் கோரவில்லை. ஆனால் அவர்கள் அதனை வலிந்து வழங்கினார்கள். ஏற்ற பதவி நிலைகளை நான் சரியாக முன்னெடுத்தேன்.

கடந்த ஒக்டோபர் மாதம் ஆறாம் திகதியன்று கட்சியிலிருந்து வெளியேறும் வரையில் நான் கட்சிக்காக எனது பணத்தினை செலவழித்துள்ளேனே தவிரவும் கட்சியின் பணத்தினை எனது செயற்பாடுகளுக்காக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தவில்லை. அதற்கானதேவையும்எனக்குஇருக்கவில்லை.

அப்படியான சூழலில் தமிழ் அரசுக் கட்சி தனது கொள்கை, கோட்பாட்டிலிருந்து முழுமையாக விலகிவிட்டது. தற்போது சமஷ்டிக் கொள்கை சம்பந்தமாக அதிகமாக பேசுகின்ற சுமந்திரனே, வடக்கு, கிழக்கு இணைவதற்கு வாய்ப்பில்லை, சமஷ்டியை கைவிட்டுவிட்டோம் என்று பகிரங்கமாவே கூறியுள்ளார்.

அதுமட்டுமன்றி, இறுதியாகத் தலைவருக்கான தெரிவு இடம்பெற்றபோது போட்டி அடிப்படையில் அது நிகழக்கூடாது என்று வலியுறுத்தினேன். சம்பந்தன் அதனை ஏற்றுக்கொண்டிருந்தாலும் அவரால் அதனைச் செயற்படுத்த முடியவில்லை. ஈற்றில் கட்சியின் தலைமைக்காக தேர்தல் நடத்தப்பட்டு தற்போது நீதிமன்றத்தில் வழக்கு தாக்கப்பட்டுள்ளது.

இப்போது தமிழ் அரசுக் கட்சி சிதைக்கப்பட்டள்ளது. வீட்டில் இனி எடுப்பதற்கு எதுவுமில்லை. அனைத்தையும் பாழாக்கிவிட்டார்கள். வீடு தனிநபரின் ஆதிக்கத்தக்குள் சென்று அழிந்து விட்டது. தமிழ்த்தேசியக்கூட்டமைப்புசிதைந்துவிட்டது. 22 ஆசனங்கள் ஐந்து ஆசனங்களாக மாறிவிட்டது.

இனியும் கட்சியில் இருக்க முடியாது என்ற நிலைமை ஏற்பட்டபோது தான் நாங்கள் வெளியேறும் முடிவினை எடுத்தோம் என்றார்.

## முன்னணியின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கும் என்ற கருத்தை ஒருபோதும் ஏற்கமாட்டார்கள் என்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளரும் யாழ்.தேர்தல் மாவட்ட வேட்பாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார்.

யாழ்ப்பாணம் அராலியில் நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்தும் தெரிவித்ததாவது:

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் அண்மையில் தனது தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ளது. அந்தக் கட்சியும் அதன் முன்னணி அமைப்பான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இலங்கை தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக இந்தியா எடுத்துக்கொண்ட நிலைப்பாடுகளை காட்டமாக விமர்சித்தே வந்துள்ளனர். இன்னும் குறிப்பாகக் கூறுவதாக இருந்தால், தங்களை இந்திய எதிர்ப்புவாதிகளாகவே காட்டி வந்துள்ளனர்.

இப்பொழுது தமது தேர்தல் அறிக்கையில் தமிழ் மக்களின் பிரச்சினை எவ்வாறு தீர்க்கப்படும் என்ற இடத்தில் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையில் முரண்பாடுகள் முற்றிவரும்பொழுது இந்தியாவின் பாதுகாப்பிற்கு ஈழத்தமிழ் மக்கள் கவசமாக அமைவார்கள். அந்தத் தருணத்தில் இந்தியா ஈழத் தமிழர்களுடன் பேசுமென்றும் அப்பொழுது ஈழத்தமிழ் மக்களுக்கு ஏற்ற ஓர் அரசியல் தீர்வு எட்டப்படும் என்றும் கூறியுள்ளனர். அது மாத்திரமல்லாமல், ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்பது சாத்தியமில்லை என்றும் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் மாற்றத்தினூடாக மாத்திரமே தீர்வை எட்ட முடியும் என்றும் கூறியிருக்கின்றார்.

முதலாவதுவிடயத்தைஎடுத்துக்கொண்டால் இந்திய சீன முரண்பாட்டைப் பொறுத்தவரை அவற்றைஎவ்வாறுதீர்ப்பதுஅல்லதுசமாளிப்பது என்பது தொடர்பாக இந்திய சீன நாடுகளினுடைய வெளிவிவகார அமைச்சுகள் தீர்மானித்துக்கொள்ளும். இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையில் எல்லை முரண்பாடுகளும் இந்து சமுத்திரத்தில் வல்லாதிக்கப் போட்டிகளும் இருந்தாலும்கூட, இரண்டு நாடுகளுக்கும்இடையில்பல்லாயிரக்கணக்கான டொலர்கள் பெறுமதியான வர்த்தகங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இந்த வர்த்தகங்களைச் சீர்குலைக்கும் வகையில் எந்த முடிவுகளையும் இந்தியாவோ சீனாவோ எடுக்காது என்பதை எந்த ஒரு அரசியல்மாணவனும்புரிந்துகொள்ள முடியும். இந்த அடிப்படை விடயமே புரியாமல் இவர்கள் கட்சி நடத்துவதுதான் வேடிக்கை. ஆகவே இருநாடுகளுக்கும் இடையில் முரண்பாடுகள் முற்றி அந்த நிலையில்தான் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்று இவர்கள் கனவு கண்டால் அது கடல் வற்றிக் கருவாடு சாப்பிடுவதற்கு ஒப்பானது.

மறுபுறத்தில், ஒற்றையாட்சி தீர்வை முற்றுமுழுதாக நிராகரிப்பதாகக் கூறுகிறார்கள். அதனால் மாகாணசபை முறைமையையும் எதிர்க்கிறார்கள். இலங்கையில் இருக்கின்ற ஒற்றையாட்சி அரசியல் சாசனத்திற்கு உட்பட்டுத்தான் இந்த நாட்டில் ஜனாதிபதி தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், மாகாண சபை தேர்தல், உள்ளூராட்சி தேர்தல்கள் என்பனவற்றை நடத்த முடியும். இதனை ஏற்றுக்கொண்டுதான் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ்இலங்கையின்தேர்தல்களில் போட்டியிட்டும் வருகின்றது. ஆனால் மாகாணசபை என்று வருகின்றபொழுது அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் ஒற்றையட்சியின்கீழ் நடைபெறும் அதிகாரப் பரவலாக்கலையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும்அதற்கானவியாக்கியானங்களையும் கூறி வருகின்றார்கள்.

ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வு சாத்தியமில்லை என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். ஒற்றையாட்சி தவிர்ந்த மாற்று அரசியல் அமைப்பு முறையொன்று பல்லின சமுதாயங்கள் வாழும் ஒரு நாட்டிற்கு தேவைஎன்பதுஉலகறிந்தஉண்மை. ஆனால் இன்று இலங்கையில் ஒற்றையாட்சிக்குட்பட்ட வகையிலேயே மாகாணங்களுக்கான அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

அது தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாகக் கொடுக்கப்பட்டதல்ல. மாறாக, சகல மாகாணங்களுக்கும் இந்த அதிகாரப் பரவலாக்கம் என்பது செயற்படுத்தப்படுகின்றது. ஆகவே அவ்வாறான ஒரு சூழ்நிலையில் தமிழ் மக்களுக்கான நிரந்தரமான அரசியல் தீர்வு எட்டப்படும் வரையில் குறித்தொதுக்கப்பட்ட மாகாணசபை முறைமையை நாம் நடைமுறைப்படுத்த வேண்டும்.

முப்பது வருடத்திற்கும் மேல் யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்கித்தவித்த எமது மக்கள் தமது உறவுகளையும் தமது உழைப்புகள் அனைத்தையும் இழந்து கையறு நிலையில் இருப்பது மாத்திரமல்லாமல், நாட்டை விட்டே ஓடிக்கொண்டிருக்கும் ஒரு சூழ்நிலையில் குறைந்தபட்சம் அந்த மக்களின் அடிப்படை விடயங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கும் அவர்கள் தமது சொந்தக் காலில் நிற்பதற்கான பொறிமுறைகளை ஏற்படுத்துவதற்கும் குறைந்தபட்ச அபிவிருத்திகளையாவது அவர்கள் ஏற்படுத்திக்கொள்வதற்கும் இந்த மாகாணசபைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைநாம்பாவிக்கப்போகின்றோமா இல்லையா என்பதுதான் எம்முன்னால் உள்ள கேள்வி.

நிரந்தர தீர்வு கிடைக்கும்வரை எமக்கு எதுவுமே தேவையில்லை என்பது புத்திசாலித்தனமா? அல்லது கிடைத்த அர்ப்ப சொற்பத்தை வைத்து எமது மக்களுக்கான இயலுமான சேவைகளைச் செய்துகொண்டு நிரந்தரத் தீர்வை நோக்கிப் பயணிப்பது சரியானதா? இப்பொழுதுள்ள முறைமையை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் அடுத்த கட்டம் என்பது என்ன? அதனை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெளிவுபடுத்த வேண்டும். அந்த தெளிவுபடுத்தல் என்பது யார் யாருக்கோ முரண்பாடுகள் முற்றி அந்த முரண்பாட்டின் விளைவாக தமிழ் மக்களின் பிரச்சினை தீரும் என்று கற்பனையில் மிதப்பது இலவுகாத்த கிளியின் கதையாகவே இருக்கும்.

நாம் கிடைத்துள்ள அதிகாரங்களைப் பற்றிக்கொள்வது என்பது எமக்கு ஐம்பது ரூபாய் தேவைப்படும்பொழுது எம்கைவசம் உள்ளதோ இருபது ரூபாய். அதனை வைத்துக்கொண்டுஎஞ்சிய முப்பது ரூபாயைப் பெறுவதற்கு முயற்சிப்போமா அல்லது இந்த இருபது ரூபாவை தூக்கி வீசிவிட்டு ஐம்பது ரூபாவைத் தேடப்போகின்றோமா என்பது எம்மக்களுக்கு நன்றாகத் தெரியும். எம்மக்கள் புத்திகூர்மையுடையவர்கள்.

எனவே உள்ளுர் பிராந்திய, சர்வதேச நிலைமைகளைப் புரிந்துகொண்டு தமிழ் மக்களின் குறுகியகால நீண்டகால விடயங்களைக் கருத்திலெடுத்து அவற்றை ஒரு தீர்வை நோக்கிக் கொண்டுசெல்லக்கூடிய ஐக்கியப்பட்டசக்தியாகஇன்றுஇருக்கின்றசங்கு சின்னத்தில் போட்டியிடும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியினருக்கு வாக்களிக்குமாறு அன்புரிமையுடன் கோருகின்றோம் என்றார்.

## அமெ. ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறுகம்குடாவில் இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகள் மீது துப்பாக்கி பிரயோகத்தினை மேற்கொள்ளும்திட்டத்தினை முன்னெடுக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது என அமெரிக்கநீதித்திணைக்களம்தெரிவித்துள்ளது.

ஈரான் இராணுவத்தின் இஸ்லாமிய புரட்சிகர காவல்படையே இந்த திட்டத்தை ஒப்படைத்திருந்தது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில்அமெரிக்கநீதித்திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஒக்டோபர் 23 அமெரிக்க இஸ்ரேலிய அரசுகள் அறுகம்குடாவில் சுற்றுலாப் பயணிகளிற்குஆபத்துள்ளதாகஎச்சரித்திருந்தது. அதன்பின்னர் இலங்கை அரசு இது தொடர்பில் மூன்று நபர்களைக் கைதுசெய்திருப்பதாகக் குறிப்பிட்டிருந்தது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் ஒருவர் சிசி-2. இவர் கைது செய்யப்பட்ட பின்னர், அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய சந்தேகநபரான சகேரி என்பவர் தானே சிசி-2ஐ இஸ்ரேலிய துணைத் தூதரகத்தைக் கண்காணிக்குமாறு கேட்டுக்கொண்டார்என்பதைஒப்புக்கொண்டார். ஒக்டோபர் 28 அன்று அவர் எவ்.பி.ஐயிடம் இதனை ஒப்புக்கொண்டார். தானும் சிசி-2 என்பவரும் சிறையில் ஒன்றாகத் தண்டனை அனுபவத்தார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இஸ்ரேலின் துணைத் தூதரகத்தைக் கண்காணித்து வேவுபார்த்து பெறப்பட்ட தகவல்களை ஈரானின் புரட்சிகர காவல்படையிடம் ஒப்படைத்ததாக சகேரி எவ்.பி.ஐ.யிடம் தெரிவித்தார். இதன் பின்னர் ஈரானிய அதிகாரிகள் மற்றுமொரு இலக்கை அடையாளம் காணுமாறு சகேரியைக் கேட்டுக்கொண்டுள்ளனர், இதன்பின்னர்சகேரி சிசி-2 விடம் இஸ்ரேலிய சுற்றுலாப்பயணிகள் அதிகமாக செல்லும் அறுகம்குடாவினை வேவு பார்க்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

பின்னர்அறுகம்குடாவில்பெரும்துப்பாக்கிச் சூடு நடத்துவதற்குத் திட்டமிடுமாறு ஈரான் அதிகாரிகள் சகேரிக்கு உத்தரவிட்டுள்ளனர். சிசி-2 இந்த்தத தாக்குதலிற்காக ஏகே -47 துப்பாக்கிகளையும்ஏனையஆயுதங்களையும் வழங்குவார் என திட்டமிடப்பட்டதாக சகேரி தெரிவித்துள்ளார்.

## மக்களின். ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப்போராடியவர்களும், அதன் பின்னணியிலே செயற்படுகின்றவர்களும் ஒற்றுமைப்பட்டு அமைத்துள்ள கூட்டமைப்புதான் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியாகும்.

அடிமைப்பட்டு, விடுதலைக்காக ஏங்கி நிற்கின்ற எமது இனத்துக்கு அவசியமானதும், அவசரமாகவும் தேவைப்படுகின்ற அரசியல் ஒற்றுமையின்அடிப்படையில்உருவாக்கப்பட்ட கூட்டணியாகவே ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டு காணப்படுகின்றது.

தமிழ் மக்கள் விரும்புகின்ற ஒற்றுமையை நாமும்ஏற்றுக்கொண்டு, கூட்டுத்தலைமையின் கீழ், தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பெற்றுக்கொடுக்கின்றதார்மீககடமையிலிருந்து விலகாத ஓர் அணியாக எமது தரப்பே உள்ளது என்பது வெளிப்படையானது.

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் ஒற்றுமைக்கு, நேர்மைக்கும் வாக்களித்து பிரதிநிதிகளை ஒரே அணியாகத் தெரிவு செய்வதன் ஊடாகவே அவர்களின் அன்றாடப் பிரச்சினைகள் முதல் அனைத்துப் பிரச்சினைகளுக்குமானதீர்வினைஎட்டுவதாக இருந்தால் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியை பலம்மிக்கதாக ஒரே அணியாக நாடாளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டியது உங்களது கடமையாகின்றது.

ஒன்றுபட்டால் நாங்கள் நிமிர்ந்து நிற்போம். பிரிந்துபோனால் நாம் வீழ்ந்து போவோம். அந்தவகையில் ஒன்றுபட்டு தற்போது நிற்பது ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி தான்.

தமிழ் மக்கள் பல சந்தர்ப்பங்களில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒற்றுமைப்பட்டு ஒன்றாக வாருங்கள் என்று கூறியிருக்கின்றார்கள். அந்தக் கூற்று உண்மையானதாக இருந்தால், அடிமனதிலிருந்து வருவதாக இருந்தால் எம்மையே அவர்கள் தெரிவு செய்ய வேண்டும் என்றார்.

## பாடசாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறும் மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணத்தின் பெயர் என்ன என்பது குறித்து தனக்குக் கவலையில்லை என ஜனாதிபதி தெரிவித்தார்.

இதேவேளை, குழந்தைகளுக்கு முறையான கல்வியை வழங்குவதன்

தொடர்ச்சி 9ம் பக்கம்....

## பாடசாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடாக இந்த நாட்டில் வறுமையை இல்லாதொழிக்கும் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க குருநாகலில் இடம்பெற்ற கூட்டத்தில் தெரிவித்தார். அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தந்தையிடமிருந்து மகனுக்கு அதிகாரம் செல்லும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆட்சியைத் தக்கவைத்திருந்த ஜனாதிபதி, மாமாவிடமிருந்து மகனுக்கு அதிகாரத்தை எதிர்பார்த்தார். ஆனால் இந்நாட்டு மக்கள் செப்டம்பர் 21 அன்று அந்த ஊழல் மற்றும் நாசகார குடும்பங்கள் அனைத்தையும் தோற்கடித்து சாதாரண மக்களுக்கு அதிகாரத்தை மாற்றினர்.

அந்த ஊழல்வாதிகள் கனவிலும் நினைத்திருக்கமாட்டார்கள் தங்களது வாழ்நாள் காலத்தில் இவ்வாறானதொரு சம்பவமொன்று நடக்கும் என்று, எவ்வாறாயினும், மீண்டும் அவர்களின் கைகளுக்கு அதிகாரம் மாற்றப்படாது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

நமது அரசின் மிக முக்கியமான திட்டம் கிராமப்புற வறுமையை ஒழிப்பதாகும். நல்ல கல்வியையும் அறிவையும் அரசால் வழங்க முடியுமானால், அந்த குடும்பம் ஏழைக் குழந்தையைப் படிக்க வைத்து அவர்களின் வறுமையில் இருந்து மீண்டு வருவர். ஆனால் அந்தக் குடும்பம் ஏழ்மையானதாகவும், குழந்தை படிக்காதவராகவும் இருந்தால், அந்தக் குடும்பம் ஏழ்மையானது, இது சுழற்சி வறுமையின் நெருக்கடியாகும். எனவே, கல்வியில் ஒரு பெரிய சீர்திருத்தத்தை நாங்கள் கொண்டு வரவுள்ளோம், இதன் மூலம் ஒவ்வொரு குழந்தையும் பாடசாலையை விட்டு வெளியேறும் வரையில் எதிர்காலத்திற்கான கல்வி அல்லது தொழில்முறை பாதையில் வரவேண்டும்.

ஜனாதிபதி தேர்தலில் எமக்கு வாக்களிக்காதவர்கள் இருந்தனர். சிலருக்கு சிறு சந்தேகம் இருந்தது. அவநம்பிக்கை ஏற்பட்டது. தயக்கம் இருந்தது. ஆனால் இப்போது... தோழர்கள் என்று அழைக்கிறார்கள்... அப்போது எங்களுக்கு வாக்களிக்காதவர்கள்தான் தற்போது தேர்தல் பணியின் போது அதிக

## தேர்தல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழகங்களில் பணிபுரிபவர்களுக்கும் அவற்றில் கல்வி கற்கும் மாணவ, மாணவிகளுக்கும் பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்கு இயலுமான விதத்தில் விடுமுறை வழங்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தனியார் பல்கலைக்கழகங்களில் பணிபுரிபவர்களுக்கும் அவற்றில் கல்வி கற்கும் மாணவ, மாணவிகளுக்கும் தேர்தல் விடுமுறையை வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 2006 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பிறந்த 18 வயதை பூர்த்தி செய்த அனைத்து க.பொ.த உயர் தர மாணவ, மாணவிகளுக்கும் பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்கு விடுமுறை வழங்குமாறு மேலதிக வகுப்புகளின் முகாமையாளர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# 12,114 பேர் மழையால் பாதிப்பு

3 மாகாணங்களில் தாக்கத்தை ஏற்படுத்திய பலத்த மழையுடனான வானிலையினால் 12,114 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நவம்பர் முதலாம் திகதியிலிருந்து இதுவரை அவர்கள் பலத்த மழை, காற்று மற்றும் வெள்ளம் ஆகிய அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

மத்திய, சப்ரகமுவ மாகாணங்களில் பகல் 01 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் ஏற்படக்கூடிய கடும் மின்னல் தாக்கங்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

நேற்று முற்பகல் 8.30-உடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் அதிகளவிலான மழைவீழ்ச்சி சிலாபம் - மெல்லவ பிரதேசத்தில் பதிவானது.

இங்கு 221.6 மில்லிமீட்டர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தும்மலசூரிய பகுதியில் 190.3 மில்லிமீட்டர் மழைவீழ்ச்சி பதிவானதுடன் பாலாவி பகுதியில் 150.4 மில்லிமீட்டர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

குளியாபிட்டிய, ஆயித்தியமலை, பளுகஸ்வெவ, எல்கடுவ, உல்ஹிட்டிய ஆகிய பகுதிகளில் கடந்த 24 மணித்தியாலங்களில் 100 மில்லிமீட்டருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி பதிவானதாக வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே தெதுறு ஓயா நீர்த்தேக்கத்தின் 05 வான் கதவுகள் திறக்கப்பட்டு செக்கனுக்கு 13,000 கன அடி நீர் தெதுறு ஓயாவில் விடுவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் தெதுறு ஓயாவின் இரு மருங்கிலும் வசிக்கும் மக்கள் அவதானமாக செயற்பட வேண்டும் என இடர் முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

நிலவும் மழையுடனான வானிலையினால் பதுளை, கண்டி, கேகாலை, குருநாகல், நுவரெலியா, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களின் சில பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.






# சதிகார அரசியலில் ஈடுபடுபவர்களை நிராகரித்து மக்கள் பாடம் புகட்டுவர்

## வேட்பாளர் வேலுகுமார் தெரிவிப்பு

வரலாற்றில் முதன்முறையாக கண்டி மாவட்டத்தில் இரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை வென்றெடுப்பதற்காக சிலிண்டர் கூட்டணிக்கு வாக்களிப்பதற்கு கண்டி மாவட்ட தமிழ் மக்கள் ஓரணியில் திரண்டுள்ளனர் என்று புதிய ஜனநாயக முன்னணியின்கண்டிமாவட்டதமிழ்தலைமை வேட்பாளர் வேலுகுமார் தெரிவித்தார்.

எனவே, இந்த வரலாற்று சந்தர்ப்பத்தை தமிழர்களிடமிருந்து பறிப்பதற்கு சதிகார அரசியலில் ஈடுபட்டுவரும் தரப்புகளுக்கு, அவர்களை நிராகரித்து மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள் எனவும் வேலுகுமார் கூறினார்.

தேர்தல்பிரசாரக்கூட்டமொன்றில்இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

கண்டிமாவட்டதமிழ்ப்பிரதிநிதித்துவத்தை வென்றெடுப்பதற்காக 2015 இல் நான் எதிர்கொண்ட அரசியல் சவால்கள் கொஞ்சநஞ்சமல்ல. சூழ்ச்சிகளையெல்லாம் முறியடித்து மக்கள் ஆதரவுடன் சபைக்கு சென்றேன். அதன் பின்னர் கண்டி மாவட்ட பிரதிநிதித்துவத்தை இல்லாமற் செய்வதற்கு உள்ளக சதிகள் இடம்பெற்றன.

இதன்ஓர்அங்கமாகசேறுபூசும்அரசியல்கள் முன்னெடுக்கப்பட்டன.

அப்படியிருந்தும் இரண்டாவது முறையும்



மக்கள் என்னை சபைக்கு அனுப்பினார்கள். தமிழ், முஸ்லிம் மக்கள் ஆளுமையுள்ள ஒருவர் நாடாளுமன்றம் செல்ல வேண்டும் என்பதால் எனக்கு மீண்டும் ஆணை வழங்கினர்.

இதன் மூலம் கண்டி மாவட்டத்தில் தொடர்ச்சியாக இரு தவணைகள் தமிழ் எம்.பியாக செயற்பட்ட அரசியல் சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

இந்நிலையில்,இம்முறையும்சேறுபூசல்கள் இடம்பெற்றன. கூலிப்படைகளை குத்தகைக்கு எடுத்து வதந்திகள் பரப்பப்பட்டன. அவை அனைத்தும் பொய் என்பது நீதிமன்றம் மூலம் கூட நிரூபனமானது. தற்போது மக்கள் மத்தியில் பேராதரவு பெருகி வருகிறது.

புதிய வேட்பாளராக பிரசாத் குமாரை சிலிண்டர் கூட்டணியில் போட்டியிட வைத்துள்ளேன். இதன் மூலம் கண்டி மாவட்டத்தில் முதன்முறையாக இரு தமிழ் வேட்பாளர்களை சபைக்கு அனுப்பக்கூடிய சூழ்நிலை உள்ளது. இந்த வாய்ப்பை தமிழ் மக்கள் சரியாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். சிலிண்டர்கூட்டணிக்குவாக்களிப்பதன்மூலம்ஒரேகல்லில்இருமாங்காய்களை வீழ்த்துவது போல இரு பிரதிநிதிகளை வென்றெடுக்கலாம். - என்றார். (05)

# 63 ஆயிரத்து 145 பொலிஸார் பொதுத் தேர்தல் கடமையில்

## பிரதி பொலிஸ் மா அதிபர் தகவல்


எதிர்வரும்14ஆம்திகதிநடைபெறவுள்ள பொதுத்தேர்தலைமுன்னிட்டு63ஆயிரத்து 145 பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்எனபொலிஸ்ஊடகப் பேச்சாளரும்பிரதிபொலிஸ்மாஅதிபருமான நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தல்தொடர்பாகநடைபெற்ற ஊடகவியலாளர்கள்சந்திப்பின்போதேஅவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

பொதுத் தேர்தலை முன்னிட்டு 3,200 பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும், 12,227 சிவில் பாதுகாப்பு அதிகாரிகளும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும்,நாடளாவியரீதியில்சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கும், 269வீதிதடைகளைப்பயன்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)




# தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் எண்ணம் தேசிய மக்கள் சக்திக்கு கிடையாது!

## விஜித ஹேரத்தின் அறிக்கை அதனையே வெளிப்படுத்துகிறது என்கிறார் சந்திரகுமார்



சமஸ்டியைவழங்கமுடியாது என்று சொல்வதற்கு விஜித ஹேரத்துக்கோ தேசிய மக்கள் சக்திக்கோ அதிகாரம் கிடையாது. இதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். கட்சி வேறு. அரசாங்கமும் அரசாட்சியும் வேறு என்பதை விஜித ஹேரத் புரிந்து கொள்ள வேண்டும். மாற்றத்தை உருவாக்குகிறோம் என்று சொல்லிக் கொண்டு, மாற்றமே இல்லாமல் ஆட்சி நடத்தமுடியுமா? அப்படியானால் நீங்கள்உருவாக்கமுற்படுகின்ற மாற்றம் என்ன? என்று சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும் ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளருமான முருகேசு சந்திரகுமார் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

வடமராட்சி கிழக்கில் நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கேட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கும்போது -

தமிழ் மக்களுக்குச் சமஸ்டியை வழங்க முடியாது என்று விஜித ஹேரத் சொல்வதற்கான துணிச்சலைக் கொடுத்தது தமிழ்த்தேசியத் தரப்பினரேயாகும். அவர்களுடைய குடும்பச் சண்டைகளும் குடுமிச் சண்டைகளுமே தென்னிலங்கைக்கு அதிகார போதையை அளித்துள்ளது. தமிழ் அரசியல் சிதறிப் பலவீனப்பட்டுப் போயிருப்பதற்கான முழுப்பொறுப்பையும்தமிழ்த்தேசியஅரசியலை முன்னெடுத்த கட்சிகள் ஏற்க வேண்டும். மக்களை மதிக்காமல் செயற்பட்டதன் விளைவுகளே இன்றைய சீரழிவாகும். இதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இப்போது கூட தமது தவறுகளைத் திருத்திக் கொள்வதற்கு இந்தச்சக்திகள் விரும்பவில்லை. ஆகையால்இன்னும்இன்னும்பலவீனங்களும் பின்னடைவுகளுமே ஏற்படப்போகின்றன. இதற்குத் தமிழ்ச்சமூகம் இடமளிக்கக் கூடாது.

இலங்கை ஒரு பல்லின நாடு. இங்கே தமிழ், சிங்கள, முஸ்லிம், மலையக மக்கள் வாழ்கின்றனர். அந்தந்தச் சமூகங்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற மக்கள் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்திருக்கின்றனர். எதிர்க்கட்சியாக இரண்டு தடவைகள் பாராளுமன்றத்தில் தமிழ்த்தரப்பு அமர்ந்துள்ளது. இதையெல்லாம்விஜிதஹேரத் அறியாமல், புரிந்து கொள்ள முற்படாமல் பேசுகிறார். நாம் ஐக்கிய மக்கள் சக்தியில் தமிழ்பேசும் சமூகத்தினராகவும் இலங்கைச் சமூகங்களாகவும்ஒன்றிணைந்துநிற்கிறோம்.

இலங்கையின் ஜனநாயகச் சூழலையும் பன்மைத்துவத்தையும் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற ஒரே தரப்பு நாம்தான். அதனால்தான் எமக்கு ஆதரவு அதிமாக உள்ளது என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சமத்துவக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளர் வேங்கை, தவிசாளர் மனோகரன் எனப் பலரும் உரையாற்றினர். பெருமளவான பொதுமக்களும் மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir


# பாராளுமன்றத் தேர்தல் - 2024
# யாழ் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

சமூக தொழின் முனைவர், தகவல் தொழில்நுட்ப வல்லுநர்

## தமிழர் இருப்பு
## பொருளாதார அபிவிருத்தி



கௌரி

B.Sc, LL.B (Hons) (UK)

## கௌரி காப்பு

1. ஐம்பதுவீத பெண்கள் பங்களிப்பு
2. வெளிப்படைத்தன்மை
3. மனநல பாதுகாப்பு
4. காணியுரிமை
5. விவசாய மறுமலர்ச்சி
6. போதைவஸ்து ஒழிப்பு
7. கல்வி மேம்பாடு
8. இளம் தொழின் முயற்சியாளருக்கான உதவித்தொகை வழங்குதல்
9. மாற்றுத் திறனாளிகளுக்கான தொழில்வாய்ப்புக்களை உருவாக்குதல்
10. பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான சிறுகைத்தொழில் ஊக்குவிப்பு
11. திரைப்படத்துறை மீள் உருவாக்கம்
12. பதனிடப்பட்ட உணவு வகைகள் உற்பத்தி ஏற்றுமதியை அதிகரித்தல்
13. சூழல் பாதுகாப்பு மீள் சுழற்சி திட்டம்
14. பெண்கள், சிறுவர், முதியோர் பாதுகாப்பு திட்டங்கள்
15. தகவல் தொழிநுட்ப பூங்கா உருவாக்கம்
16. சுற்றுலாத்துறை அபிவிருத்தி
17. சமூகவலைத்தள பாதுகாப்பு
18. கூட்டுறவுச்சங்கங்களின் வகிபாகத்தை பலப்படுத்தல்
19. மீனவர்களின் நிரந்தர வாழ்வாதார உரிமத்தைப் பாதுகாத்தல்
20. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SGDs) அடைதலுக்கான உறுதிப்பாடு




தமிழர் விடுதலைக் கூட்டணி

1 2 3 4 5 6 7 8 9

காலைக்கதிர் Kalaikkathir




# கந்தளாய் வைத்தியசாலையில் அறுவைச் சிகிச்சைகள் பாதிப்பு

மருத்துவ ஆலோசக நிபுணரை உடனடியாகநியமிக்குமாறுகந்தளாய் ஆதார வைத்தியசாலை சுகாதார அமைச்சுக்கு அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

அண்மையில் மருத்துவ ஆலோசக நிபுணர் இன்மையால் சத்திர சிகிச்சைகள் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வைத்திய சேவைகள் துணை பணிப்பாளர் பி.என்.எதிரிசிங்கசுகாதாரஅமைச்சுக்கு அவசர வேண்டுகோள் விடுத்து அனுப்பியுள்ள கடிதத்தில் -

மாற்று சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியசாலைக்கு அவரசமாக தேவைப்படுகிறார்.

மருத்துவமனையின்தற்போதைய சத்திர சிகிச்சை மருத்துவ ஆலோசக நிபுணர் தகுந்த மருத்துவக் காரணங்களை சமர்ப்பிக்காமல் தொடர்ந்து இரண்டு நாள்களாக சுகவீன விடுமுறையில் உள்ளார்.

இதனால் வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைகள் பிரிவு கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் அவசர பிரிவு நோயாளிகள் திருகோணமலையில் உள்ள மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், தற்காலிகமாக பிரதி பொது சத்திர சிகிச்சை மருத்துவ ஆலோசக நிபுணராக வைத்தியர் சிவமயூரன் சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார்.

வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர ஆலோசகர் சத்திரசிகிச்சை நிபுணர் இன்னும் கடமைக்கு சமுகமளிக்கவில்லை. இது அத்தியாவசிய மருத்துவ சேவைகளை வழங்குவதற்கான வைத்தியசாலையின் செயற்பாடுகளில் இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

இந்த கோரிக்கைக்கு சுகாதார அமைச்சகம் இன்னும் பதிலளிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# மண்திட்டு இடிந்து வீழ்ந்து பாடசாலை கட்டடம் சேதம்

## கண்டியில் சம்பவம்

கண்டி டி.எஸ்.சேனநாயக்கா கல்லூரியின் மீது மண் திட்டு இடிந்து வீழ்ந்ததில் பல வகுப்பறைகள் சேதமடைந்துள்ளன.

வெள்ளிக்கிழமை இரவு பெய்த கடும் மழையால் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதனால் 27 மேலதிக வகுப்பறைகள் தற்போது அதிக ஆபத்தில் உள்ளன. அதில் ஆரம்ப பிரிவு வகுப்பறைகளும் அடங்கும். சனிக்கிழமை இரவு அதிக மழை பெய்தால் வகுப்பறைகளுக்கு மேலும் அதிக சேதம் ஏற்படலாம் என பாடசாலையின் அதிபர் ஆனந்த உபதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார்.

தற்போதுள்ள அபாயம் குறித்து மத்திய மாகாண ஆளுநர் உட்பட அனைத்து அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அதிபர் தெரிவித்துள்ளார்.

எனவே திங்கட்கிழமை முதல் பாடசாலையின் கல்வி நடவடிக்கைகள் அதிகாரிகளின் அறிவுறுத்தல்களுக்கு அமைய மேற்கொள்ளப்படும் எனவும் அதிபர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)



காலைக்கதிர் Kalaikkathir

# இலக்கத் தகடு இல்லாத மற்றுமொரு சொகுசு வாகனம் நீர்கொழும்பில் மீட்பு



நீர்கொழும்பு, தெமங்சந்தி பிரதேசத்தில் இலக்கத் தகடு இல்லாத சொகுசு வாகனம் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளதாக நீர்கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர்.

நீர்கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த சொகுசு வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் உள்ள தனது சகோதரன் ஊடாக இந்த சொகுசு வாகனம் தனக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக சொகுசு வாகனத்தின் உரிமையாளர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இந்த சொகுசு வாகனம் பிரபல வர்த்தகர் ஒருவரால் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நீர்கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பனாகொடையில் விபத்து; இளைஞன் பரிதாபச் சாவு

அத்துருகிரிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பனாகொடை சந்திக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளார் என அத்துருகிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

அத்துருகிரிய நோக்கிப் பயணித்த வாகனம் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது மோட்டார் சைக்கிளின் செலுத்துனர் படுகாயமடைந்துள்ள நிலையில் ஹோமாகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் பன்னிபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞன் ஆவார்.

விபத்தினையடுத்து, வாகனத்தின் சாரதி பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அத்துருகிரியபொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர். (05)

# பொல்கொல்ல நீர்த்தேக்க 2 வான் கதவுகள் திறப்பு

கடும் மழையால் கண்டி பொல்கொல்ல நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இரண்டு வான் கதவுகளும் தலா ஒரு மீற்றர் வரை திறக்கப்பட்டுள்ளதாக இலங்கை மகாவலி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு வான் கதவில் இருந்தும் சுமார் வினாடிக்கு 140 கன மீற்றர் நீர் விக்டோரியா நீர்த்தேக்கத்திற்கு திறந்து விடப்படுவதாக மகாவலி அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது. (05)

# குளியாப்பிட்டி இன்ஸ்பெக்டருக்கு நவம்பர் 22 வரை விளக்கமறியல்

குளியாப்பிட்டி பொலிஸ் தலைமையகத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகரை எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு குளியாப்பிட்டி மேலதிக மாவட்ட நீதிபதி தினிந்து சமரசிங்க வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

பெண் ஒருவர் குடும்பத் தகராறு காரணமாக தனது கணவருக்கு எதிராக குளியாப்பிட்டி பொலிஸ் தலைமையகத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகரிடம் முறைப்பாடு அளித்திருந்தார்.

இதனையடுத்து, இந்த முறைப்பாடு மேலதிக விசாரணைகளுக்காகப் பெண்கள் மற்றும் சிறுவர் பணியகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

விசாரணைகள் முறையாக நடத்தப்படவில்லை என குறித்த பெண், குளியாப்பிட்டி பொலிஸ் தலைமையகத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகரிடம் கூறியுள்ளார். பின்னர், குளியாப்பிட்டி பொலிஸ் தலைமையகத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகர் குறித்த பெண்ணின் கணவரைப் பலமாகத் தாக்கி காயப்படுத்தியுள்ளார். இதனையடுத்து, குளியாப்பிட்டி பொலிஸ் தலைமையகத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் வெள்ளிக்கிழமை இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.11.2024இல் வெளியிடப்பெற்றது